விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 019 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 22 ஞாயிற்றுக்கிழமை (07.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## இலக்கை அடைந்தது ஆதித்யா எல் - 1

(புதுடில்லி)

சூரியனை ஆராய்வதற்காக இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோவினால் ஏவப்பட்ட ஆதித்யா எல் - 1 என்ற விண்கலம் தனது இலக்கை 19

## தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையே தரைவழிப்பாதை

### இலங்கையும் ஒப்புதல் - ஜனாதிபதி ரணில்

(யாழ்ப்பாணம்)

தலைமன்னாருக்கும் - இராமேஸ்வரத்துக்கும் இடையே தரைவழிப்பாதை அமைக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை யாழ். மாவட்ட சர்வமதத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 19


## அகிலத்திருநாயகியை நேரில் அழைத்து ரணில் பாராட்டு



19

# இலங்கை சிவபூமி என்பதை பௌத்தர்களும் ஏற்றுள்ளனர்

## யாழில் சர்வமதத் தலைவர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கை சிவபூமி என்பதை பௌத்தர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்து மதம் மிகவும் பழைமை வாய்ந்த மதம் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண வர்த்தகர்களின் பிரச்சினைக்கு இரு மாதங்களில் தீர்வு

### ஜனாதிபதி ரணில் உறுதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எதிர்வரும் இரண்டு மாதங்களில் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட தொழில் துறையினர், மீனவர்கள் மற்றும் விவசாயிகளுடன் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். 19

## திருமலையில் கோலாகலமாக நடைபெற்ற ஜல்லிக்கட்டு



19

## நல்லூரை விட பெரிய ஆலயம் அமைக்க முடியும்

### சர்வமதத் தலைவர்களிடம் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

அனைத்து மதத் தலைவர்களும் விரும்பினால் நல்லூரை விட பெரிய ஆலயத்தை அமைக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று யாழ். மாவட்ட சர்வ மதத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். 19

## வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் இன்று முதல் மழையுடன் கூடிய வானிலை நிலவுவதற்கு வாய்ப்பு உண்டு என என வளிமண்டல 19

### வடக்கு யுத்தத்தின்போது

## இழக்கப்பட்ட வருமானம் மீளப் பெறப்படும் - ரணில்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் யுத்தத்தின்போது இழந்த வருமானத்தை மீளப் பெறுவதை இலக்காகக் கொண்டு அபிவிருத்தி வேலைத் திட்டத்தை விரைவுபடுத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் வட மாகாண சர்வ மதத் தலைவர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதி 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அலுவலக வேலைக்கு ஆள் தேவை

பகுதி நேர அலுவலக வேலைக்கு பெண் பணியாளர்கள் தேவை. (ஆங்கில அறிவு, கணனி அறிவு) அவசியம் வீட்டில் இருந்தவாறே பகுதி நேரமாக வேலை செய்யலாம். (18528)

**074 216 0494**

## வாடகைக்கு

யாழ். நகருக்கு அண்மையில் மகளிருக்கான Beauty parlor நடாத்துவதற்கேற்ற சிறிய இடம் தளபாடங்களுடன் உண்டு. வாடகை ரூபா - 20,000/= (C-8090)

**074 217 0383**

# பொருட்கள் மீதான வரி ஏப்ரல் மாதம் குறையும்

(கொழும்பு)

வரி அதிகரிப்பால் சிரமத்தில் உள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், ஏப்ரல் மாதத்தில் பல பொருட்களின் மீதான வரியை குறைப்பது குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இந்த ஆண்டு தேர்தல் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதால், மக்கள் மீதான வரிச்சுமையால் தேர்தலின் போது ஏற்படக்கூடிய பாதகமான சூழ்நிலையை தவிர்க்கும் வகையில் ஏப்ரலில் பல பொருட்களுக்கான சுங்க வரியை குறைப்பது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த புத்தாண்டுக் காலத்தில் பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## A/L (2024) மாணவர்களுக்கான Online Paper Class புவியியல்

**V.Mehala**
BA(Hons) in Geography (18527)

076 055 4530, 077 695 4530

## Rhodesian ridgeback (Foreign breed)

நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
விலை : 25,000
(பேசித் தீர்மானிக்கலாம்) (18527)

மேலதிக தொடர்புகளுக்கு:

**077 695 4530**

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் தையல் நிலையம் ஒன்றிற்கு சகலவிதமான தையலும் வெட்டித் தைக்கத் தெரிந்த பெண் வேலையாள்த் தேவை. (18534)

**077 257 5154**

## காணி விற்பனைக்கு

நிலப்பரப்பு
யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன் அமைந்துள்ள 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (17761)

**077 077 4919**

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வயதான பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். (18523)

**077 958 3573**

## Pearson International College Vavuniya

PIC — GATEWAY TO SUCCESS

**Applications are called for IELTS tutor cum admin officer**

- Candidates should have minimum HND in English or any other academic qualification in English.
- Prior teaching experiences would be an added advantage.
- Previous IELTS score above or equal to 6.5 is recommended.
- Should be able to work during weekends.

Email your CV within 14 days of this advertisement to
*pearsoninternationalcollegeva@gmail.com*
**Call +94 74 385 7584 for more info**

No 65 2/2, Vairavarkovil Road, Vairavapuliyankulam, Vavuniya (18525)

## நாகபூஷணி திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

இல.264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம். (18531)


**077 138 7596, 071 999 9306**

## வீடு வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில் பிறவுண் வீதிக்கு இடையில்சிறிய வீடு வாடகைக்கு உண்டு. கோயில் பூசகர்கள்/சைவபோசனமுடையவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (18530)

**076 472 2313**

# மரண அறிவித்தல்



தோற்றம்
09 - 09 - 1954

மறைவு
05 - 01 - 2024

## கந்தையா மாணிக்கவாசகர்
**( M.R.S Sweets உரிமையாளர் )**

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மாணிக்கவாசகர் அவர்கள் நேற்று முன்தினம் (05.01.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - லீலாவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை - அரியமலர் தம்பதியரின் அன்பு மருமனும் சியாமாளா அவர்களின் அன்புக் கணவரும் கமலாதேவி, லலிதாதேவி, காலஞ்சென்றவர்களான பத்மநாதன், திருநாவுக்கரசு மற்றும் ஜெகதீஸ்வரன் (ஜேர்மன்), சாவித்திரி, திருஞானசம்பந்தன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மஞ்சுளா, பிறேமளா, செல்வகுமாரி, விஜயகுமாரி, தவராஜா, தேவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் தேவகி, தீபன், சாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராஜா, வினோஜா, மயூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுஷன், நிசானி, லக்ஸ்மிதா, சானுஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.01.2024) ஞாயிற்றுக் கிழமை பகல் 11.00 மணியளவில் கலாசாலை வீதி, திருநெல்வேலியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல. 54/10, கலாசாலை வீதி,
திருநெல்வேலி. 077 887 0298, 077 020 1498

(18529) தகவல்: குடும்பத்தினர்

## யாழ் நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருடம் அனுபவம் வாய்ந்த நாம் எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க



எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு
**தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி வழங்கவுள்ளோம்.**

- 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 16.01.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதிசெய்யும் தரச்சான்றும் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாளிற்கான விலை நிலைவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் தீர்மானிக்கப்படும்.



# சிறிராம் ஜுவல்லர்ஸ்
**22 கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்ஜம்** (C-8093)

# காணி விற்பனைக்கு


யாழ்ப்பாணம் கல்வியங்காடு டச்சு வீதியில் GPS Lane அருகாமையில் 6 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. 20 அடிப்பாதையுடன் மெயின் றோட் முகப்புடன் உண்டு.
தரகர் தேவையில்லை. (18516)

பார்வையிடும் நேரம் : 6.00am - 6.00pm வரை

**076 755 8606**
**077 874 3204**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை-கொழும்பு வீதியில் கோர விபத்து- இருவர் உயிரிழப்பு



(கொழும்பு)

திருகோணமலை - கொழும்பு வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்தானது கண்டி - திட்ட வேல்மங்கட பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது. கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த பேருந்து ஒன்றும், வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்று ள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5)

# இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகராக சேனுகா திரேனி செனவிரத்ன நியமனம்

(டில்லி)

வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளரான திருமதி சேனுகா திரேனி செனவிரத்ன, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தனது நற்சான்றிதழ்களை இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவிடம் ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு தனது எக்ஸ் பக்கத்தில் ஒரு குறிப்பையும் பதிவிட்டிருந்தார்.



முன்னதாக, இந்தியாவுக் கான இலங்கை உயர்ஸ்தானிகராக மிலிந்த மொரகொட அந்தப் பதவியை வகித்தார். அவரது பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ராஜபக்ஷக்கள் மீண்டும் நாட்டிலிருந்து விரட்டப்படுவார்கள்

## மேர்வின் சில்வா காட்டம்

(கொழும்பு)

ராஜபக்ஷக்கள் அனைவரும் கப்பலில் ஏற்றப்பட்டு, மீண்டும் நாட்டை விட்டு துரத்தப்படுவார்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். மேலும் நாட்டில் மோசடியான முறையில் சட்ட விரோதமாக சொத்துக்களை குவிப்பவர்களும் நாடு கடத்தப்படுவார்கள்.

இவர்களோடு அனைத்து ராஜபக்ஷக்களும் கப்பலில் ஏற்றப்பட்டு நாட்டைவிட்டு அனுப்பப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (நி-5)

# கட்டுமானப் பொருட்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

வற் வரி அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விலையேற்றம் காரணமாக கட்டுமானப் பொருட்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளதாக கட்டடத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக மணல், சீமெந்து, இரும்பு, கம்பி, மின் சாதனங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளதாக தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் எம். டி பால் தெரிவித்தார்.

ஒரு கியூப் மணல் விலையும் சீமெந்து மூட்டையின் விலையும் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டு ள்ளார்.

புதிதாக வற் வரி சேர்க்கப்பட்டுள்ளமையினால் மின் விளக்குகள் உள்ளிட்ட சில மின் உபகரணங்களின் விலைகள் அதிகரித்துள்ளதாகவும் தேசிய நிர்மாண சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## மாணிக்கம் பிள்ளையம்மா

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 2ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் பிள்ளையம்மா அவர்கள் நேற்று முன்தினம் (05.01.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் மாணிக்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் சிவராசா, லதா (புங்குடுதீவு நயினாதீவு - ப.நோ.கூ. சங்கம்), சரவணன், முருகதாசன் (அதிபர் - யா/ பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை) சிவப்பிரியா ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயலட்சுமி, நளினி (ஆசிரியை), டுதர்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேஸ்குமார், வேணுஜா, பிரகாஷ், கோகுலன், யசிந்தன், சுமேதன்; ஆசேன், டருக்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மீனாட்சி, முத்தம்மா, காமாட்சி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் கண்மணி, வேலுப்பிள்ளை, இலட்சுமி, முத்துக்குமார், பராசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.01.2024) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(18539)

# உலகக் கிண்ண இருபது-20 தொடர் ஜூன் மாதம் ஆரம்பம்

இந்த ஆண்டிற்கான உலகக் கிண்ண இருபது-20 தொடர் வரும் ஜூன் 1 ஆம் திகதி ஆரம்பமாகி 29 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ள நிலையில், அதற்கான அணிகளின் பட்டியலையும் ஐ.சி.சி அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடத்தப்படும். கடந்த 2022 ஆம் ஆண்டு இருபது- 20 உலகக் கிண்ணத் தொடர் நடைபெற்றது. இதில், இங்கிலா ந்து அணி சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

இந்த ஆண்டிற்கான இருபது-20 உலகக்கிண்ணத் தொடருக்கான அட்டவணையை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகள் இணைந்து நடத்தும் இந்த உலகக் கிண்ணத் தொடரில், இந்தியா, இங்கிலாந்து, இலங்கை, அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், அயர்லாந்து, அமெரிக்கா, பங்களாதேஷ், மேற்கிந்தியதீவுகள், நேபாளம், நியூசிலாந்து, நெதர்லாந்து, பாகிஸ்தான், நமீபியா, ஓமான், பப்புவா நியூகினியா, ஸ்கொட்லாந்து, தென் ஆபிரிக்கா உகாண்டா, கனடா ஆகிய 20 அணிகள் இடம் பெற்றுள்ளன. (நி-5)


இருபாலை கிழக்கு மண்டாக்குளம்பதி
அருள்மிகு நாச்சிமார் தேவஸ்தானம்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

அண்மையில் சமாதான நீதவான்களாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட எமது ஆலய நிர்வாக உறுப்பினர்களான



திரு.கணேசபிள்ளை கிருபாகரன்
(ஆசிரியர், இயக்குநர் மதுரம் கல்வி நிறுவனம், இருபாலை)

Best Wishes!



செல்வி கஜேந்தினி கனகசபாபதி
(ஆசிரியர் - சென்.ஜோன்ஸ் ஆரம்ப பாடசாலை)

இருவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற அம்பாளின் அருளாசிகளையும் வேண்டுகின்றோம்.

இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

(18535)

பரிபாலன சபையினர்
அருள்மிகு நாச்சிமார் தேவஸ்தானம்


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3011

Search for people, places and things

### ராகவி




### கஜா




### கௌசிகன்





### றுக்ஷா




### சிந்து




### பிரதாப்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் பசில் அமெரிக்க குடியுரிமையை கைவிட முடிவு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதுள்ள அமெரிக்க குடியுரிமையை நீக்கும் நோக்கில் அவர் செயற்படவுள்ளதாக அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பசில் ராஜபக்ஷ அல்லது நாமல் ராஜபக்ஷ எதிர்காலத்தில் இது தொடர்பான இறுதிமுடிவை கட்சி உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அண்மையில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டை அடுத்து தேசிய அமைப்பாளர் பதவி பசில் ராஜபக்ஷவிடமிருந்து பிடுங்கப்பட்ட நிலையில் அவர் அமெரிக்காவிற்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 'மன்னார் சிவபூமி' நூலை ஜனாதிபதிக்கு வழங்கிய சிவசேனை



(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்குள்ள மத தலைவர்களை சந்திக்கச் சென்றுள்ளார். இந்நிலையில் அங்கு சென்ற ஜனாதிபதியை சிவசேனை அமைப்பின் தலைவரும் எழுத்தாளருமான மறவன் புலவு சச்சிதானந்தன் வரவேற்றார். ஜனாதி பதியை பொன்னாடை போர்த்தி வரவேற்ற சிவசேனையின் இலங்கை தலைவர் சச்சி தானந் தன் 'மன்னார் சிவபூமி' என்ற நூலையும் கையளித்தார். (நி-5)

# குறைவடைந்த பிறப்பு எண்ணிக்கை

## கொழும்பு பல்கலை.பேராசிரியர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் குழந்தைகள் பிறப்பு எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் இந்திரல் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதே நிலை நீடித்தால், 2027 இல் நாட்டின் மக்கள்தொகை 23.1 மில்லியனுக்கும் குறைவாக இருக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

திருமண வயதை அடைந்த இளம் சமூகம் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்தல், திருமண வயதை அடைந்தவர்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டாம் என தீர்மானித்தமை போன்ற காரணிகள் இதனை பாதித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக சனத்தொகையுடன் தொடர்புடைய வருடாந்த பிறப்புகளின் எண்ணிக்கை 134 மில்லியனாக இருந்தாலும், இலங்கையில் பிறப்பு எண்ணிக்கையில் தொடர்ச்சியாகக் குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் கணிப்புத் தரவுகளின்படி, பிறப்புகளின் எண்ணிக்கை ஆயிரம் பேருக்கு 12 குழந்தைகளாகக் குறையலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# கலைமகள் வித்தியாலயத்திற்கான காணி விரைவில் விடுவிக்கப்படும்

## ஆளுநர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்திற்கான காணி முழுவதையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார். சுமார் 28 வருடங்களின் பின்னர் பாதுகாப்பு படையினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட யாழ்.மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலய புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மிக விரைவில் அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். அத்துடன் ஏனைய உட்கட்டமைப்பு பிரச்சினைகள் தொடர்பில் எழுத்துமூலம் கோரிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார். (நி-5-33)

# சீரற்ற காலநிலையால் அதிகரிக்கும் ஆஸ்துமா நோய்

(கொழும்பு)

சிறுவர்கள் மத்தியில் சுவாச நோய்கள் அதிகரித்து வருவதுடன் குழந்தைப் பருவத்தில் ஏற்படும் ஆஸ்துமாவும் அதிகரித்து வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

முக்கியமாக மேல் சுவாசக் குழாயில் வைரஸ் காய்ச்சல்கள் இருப்பதாகவும், இதன் காரணமாக இருமல், சளி, காய்ச்சல், தலைவலி மற்றும் சில குழந்தைகளுக்கு வாந்தியும் ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

தற்போது நிலவும் குளிர் மற்றும் மழையுடனான காலநிலை காரணமாக குழந்தைகள் மத்தியில் வயிற்றுப்போக்கும் அதிகரித்துள்ளது. வைரஸ் காய்ச்சலுக்குப் பின்னரே குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கும் அடிக்கடி ஏற்படுவதாகவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே 3 நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால், முழு இரத்த பரிசோதனை செய்து, டெங்கு பரவக்கூடிய இடங்களை அடையாளம் கண்டு சுத்தம் செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# இராசிபலன்

07.01.2024
மார்கழி 22, ஞாயிற்றுக்கிழமை,
ஏகாதசி முன்னிரவு 10.08 மணிவரை

விசாகம் முன்னிரவு 7.54 மணிவரை
சுபநேரம் 9.32-11.02 மணிவரை
இராகுகாலம் 5.02-6.32 மணிவரை

சுவர்க்கவாயில் ஏகாதசி
சந்திராஷ்டம்
ரேவதி, அச்சுவினி

வளவன்

**மேஷம்** – காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், குழப்பங்கள் தீர குருவை வழிபட வேண்டிய நாள்.

**கடகம்** – அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும்.

**துலாம்** – பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** – மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** – செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**சிம்மம்** – உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.

**விருச்சிகம்** – வழிபாடு குதூகலம் தரும், குடும்பத்தார் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர், போசனசுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**கும்பம்** – தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம்.

**மிதுனம்** – ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி** – நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், உடன்பிறப்புக்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வர்.

**தனுசு** – திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மீனம்** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனம் எல்லோருக்கும் மிக நல்ல பதிலே

# ஜனாதிபதியின் வடக்கு விஜயம்

## சர்வதேசத்திற்கான கண்துடைப்பு நடவடிக்கையே

### மன்.மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கம்

(மன்னார்)

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நீதிக்காகவே கடந்த 14 வருடங்களாக போராடிக் கொண்டிருக்கிறோம்.

ஜனாதிபதியின் வடக்கு விஜயம் என்பது உலக நாடுகளுக்கான கண்துடைப்பு நடவடிக்கை இதன் மூலம் அவர் வட மாகாணத்திற்கு சென்று தமிழ் மக்களை சந்தித்து கலந்துரையாடினேன். அங்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்று உலகை நம்ப வைப்பதற்காக நடத்தப்பட்ட ஒரு தந்திர செயல் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.


நேற்று மன்னாரில் நடைபெற்ற ஊடகசந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியாவிற்கு வருகைதந்த ஜனாதிபதி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை சந்தித்து எமது தரப்பு நியாயத்தை கேட்டிருக்க வேண்டும். ஜனாதிபதியை சந்திப்பதற்கு சென்ற வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத் தலைவி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் பொதுமக்களிடம் பொலிஸார் அத்துமீறி நடந்து கொண்ட விதம் என்பன கண்டனத்திற்குரியவை. உலக நாடுகள் இதை வேடிக்கை பார்த்து கொண்டுதான் இருக்கிறது.

நாங்கள் இலங்கை அரசை நம்பவில்லை என்றுதான் உலக நாடுகளிடம் நீதி கேட்டு நிற்கின்றோம்.

உலக நாடுகள் எமது கோரிக்கையை நிறைவு செய்து தர வேண்டும் என்பதுடன் பலாத்காரமாக கைது செய்யப்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வவுனியா மாவட்ட சங்கத் தலைவியை உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-285)

## வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கிய படகு



(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்பகுதியில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்று நேற்று அதிகாலை கரையொதுங்கியுள்ளது.

படகில் காணப்படும் மீன்பிடி திணைக்களத்தின் பதிவு இலக்கம் அழிக்கப்பட்டுக் காணப்படுவதால் குறித்த படகை போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பாவித்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மற்றும் கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-60)

## மாடுகள் திருட்டு அதிகரிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம் பொக்கனை பெரியகுளம், தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகேந்திர புற பகுதிகளில் மாடுகள் திருடப்படுவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற கால நிலையால் வெள்ளம் வற்றாது நீர் தேங்கிய நிலையே இன்னும் நீடிக்கிறது. அதனால் வீதியோரங்களில் மாடுகளை கட்டி விடுகின்றனர்.

இரவு நேரங்களில் கப்ரக வாகனத்தில் வரும் இனந்தெரியாதோரால் மாடுகள் களவாளடப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை 15 மாடுகள் களவு போயுள்ளன. இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட போதிலும் இது வரை எவரும் கைது செய்யப்பட வில்லை என உரிமையாளர்கள் கவலை வெளியிட்டனர். (நி-5-316)

## 55 கிலோ கஞ்சா மீட்பு



(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் அண்மைக்காலமாக போதைப்பொருள் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் கட்டைக்காடு காட்டுப்பகுதிக்குள் போதைப்பொருள் புதைத்து வைத்திருப்பதாக கடற்படையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதன்பிரகாரம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் வெற்றிலைக் கேணி கடற்படையினர் குறித்த இடத்தை திடீர் சுற்றிவளைப்பு செய்தனர்.

இரண்டு மணி நேரமாக 15 இற்கும் மேற்பட்ட கடற்படையினர் புலனாய்வாளர்களுடன் தேடுதல் நடத்தி வந்த நிலையில் 55Kg பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 700 | 650 | 650 | 700 |
| உருளைக்கிழங்கு | 150 | 160 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 1300 | 1200 | 1200 | 1400 |
| தக்காளி | 900 | 600 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 140 | 150 |
| கோவா | 450 | 600 | 550 | 600 |
| கரட் | 650 | 900 | 850 | 1000 |
| பூசணி | 140 | 120 | 160 | 200 |
| புடோல் | 320 | 350 | 220 | 300 |
| வாழைக்காய் | 220 | 220 | 180 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 400 | 450 | 450 | 450 |
| பாகற்காய் | 800 | 1000 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 300 | 240 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 |
| பயற்றங்காய் | 500 | 350 | 750 | 400 |
| லீக்ஸ் | 450 | 400 | 450 | 500 |
| பீற்றூட் | -- | 800 | 800 | 800 |
| கறிமிளகாய் | 800 | 600 | 600 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 400 | 450 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 650 | 500 | 400 | 650 |
| கீரை - 1 பிடி | 160 | 180 | 150 | 200 |
| தேசிக்காய் | 350 | 400 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 450 |
| வெங்காயப்பூ | 900 | 1200 | 800 | 1000 |
| முள்ளங்கி | 220 | 300 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 150 | 120 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 120 | 120 |



ஆறுமாதம் தொடக்கம் ஒன்பது மாதம் வரையான குழந்தைகளுக்கான சின்னமுத்து ரூபெல்லா தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டது. (படம்: தேவானந்தன்)

### எக்ஸ்ரே பிலிம்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு

(கொழும்பு)

அரச மருத்துவமனைகளில் கதிர்வீச்சு பணிக்கு பயன்படுத்தப்படும் எக்ஸ்ரே பிலிம்கள் இல்லாததால் நோயாளிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தகவலை அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதனை சரி செய்யுமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 422
Viber 076 636 3378





# தமிழினத்தைக் கருவறுக்கும் ஆட்சியாளர்கள் மீதான தமிழ் தலைமைகளின் நம்பிக்கை

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் திரைப்படங்களைப் பார்த்திருப்போம். அதில் எம்.ஜி.ஆர் எதிரியிடம் சண்டையிடும் போது மூன்று முறை அடி வாங்குவார். அதன் பின் எதிரியின் அடி எதுவும் எம்.ஜி.ஆரில் விழாது. ஆனால் எம்.ஜி.ஆர் எதிரியைப் போட்டு துவைத்து எடுப்பார்.

இது எதனால் என்று எப்போதும் நாம் சிந்தித்துப் பார்த்ததுண்டா? கதாநாயகன் முதலில் அடி வாங்கி பின் வில்லனை அடித்தால்பார்வையாளர்களுக்கு விறுவிறுப்பு ஏற்படும் என்று அனேகர் கூறுவர். ஆனால் அதுதான் இல்லை.

உண்மையில் எதிரியின் பலம் என்ன? பலவீனம் என்ன? அவனின் செயற்பாடுகள் எப்படி இருக்கும்? அவனை எவ்வாறு தாக்கினால் நிலைகுலைவான். மொத்தத்தில் எதிரியின் பலம் என்ன பலவீனம் என்ன என்பதை அறிந்து கொள்வதே அந்த மூன்று அடி வாங்குவதற்கான காரணம்.

அட என்ன அபிமன்யு எம்.ஜி.ஆர் அடி வாங்கும் கதையை இங்கு சொல்கிறீர் என்று நீங்கள் மனதுக்குள் முணுமுணுப்பது எமக் குத் தெரிகிறது. காரணம் இருக்கிறது கூறுகிறேன்.

எம்.ஜி.ஆர் எதிரியிடம் மூன்று முறை அடிவாங்குவதற்கும் எமது தமிழ் அரசியல் தலைமைகள் பேரினவாத சக்திகளிடம் தொடர்ந்து ஏமாந்து கொண்டிருப்பதற்கும் தொடர்பு இருக்கிறது.

ஒருமுறை இரண்டு முறையல்ல இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து பேரினவாத சக்தியின் மாயாஜாலப் பேச்சில் மயங்கி ஏமாந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

எதிரியின் பலத்தை அறியாத நம் தமிழ் தலைமை மூன்று முறை அல்ல முந்நூறு முறைக்கு மேல் தோற்றுவிட்டது. ஆனாலும் இன்றுவரை பேரினவாத சக்திகளின் தேன்தடவிய வார்த்தைகளை நம்பிக்கொண்டு தான் இருக்கிறது.

இந்த நாட்டில் ஏன் சிறுபான்மைத் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போரிட்டனர் என்பதை துளியும் சீர் தூக்கி பார்க்காத பேரினவாத அரசுகள் அவர்களைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி அவர்களை அழிக்க வேண்டும் என்பதில் தீவிரம் காட்டியது. அதை செய்தும் முடித்தது.

ஆயினும் பயங்கரவாதம் அழிக்கப்பட்டதான அறிவித்தலுக்குள் எத்தனை ஆயிரம் அப்பாவிப் பொதுமக்களின் உயிர் பறிபோயின என்பதை எவரும் சிந்திக்கவில்லை.

நாட்டில் புரையோடிக் கிடந்த பயங்கரவாதம் அழிக்கப்பட்டுவிட்டது. இனி இலங்கையில் சுதந்திரம் மலரும் என இலங்கை ஆட்சியாளர்கள் அறிவித்தனர். சுதந்திரம் என்பது பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்க வேண்டியது. ஆனால் இலங்கையில் பாதிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழினத்துக்கு இன்னமும் சுதந்திரமும் கிடைக்கவில்லை. இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நீதியும் கிடைக்கவில்லை.

> “ ஏய் ... சர்வதேசமே! இதை நம்பாதே. பாதிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழினத்துக்கு சுதந்திரமும் கிடைக்கவில்லை. இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நீதியும் கிடைக்கவில்லை என உங்களால் சர்வதேச அரங்கில் நின்று கூற முடியாது போனது ஏன்?

நிலை இதுவாக இருக்கையில் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

குறித்த விஜயம் தொடர்பில் ஏற்கனவே ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டிருந்தன.

ஆயினும் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருந்தன.

யாழ்ப்பாணத்தில்உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2025 ஆம் ஆண்டுக்குள் மீள் குடியேற்றம் முழுமையாக நடைபெறும் எனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் காணிகளை விடுவிக்க துரித கதியில் நடவடிக்கை எடுக்கப்படும், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை அடுத்த ஆறு மாதங்களில் நிறைவு செய்தல் மற்றும் புதிய பாராளுமன்றில் தமிழர் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை முன்வைத்தல் எனக் கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் மேற்குறிப்பிட்ட கூற்று வரவேற்கத்தக்கது.

ஆயினும் இதே விடயத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எத்தனை முறை கூறிவிட்டார் என்பதையும் இங்கு நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும்.

அண்மையில் வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க இதே விடயத்தைக் கூறியிருக்கின்றார்.

இவ்வாறு கூறிய விடயங்களை மீண்டும் மீண்டும் கூறி காலத்தைக் கடத்துவதில் ஆட்சியாளர்களுக்கு அலாதிபிரியம் போலும். ஏமாந்து போகின்றோம் என்று தெரிந்தும் இதைக் கேட்டு நம்பிக்கொண்டிருக்கும் எமது தமிழ் தலைமைகளை என்னவென்று கூறிவிடமுடியும்.

போர் நிறைவுபெற்றுவிட்டது. பயங்கரவாதம் அழிக்கப்பட்டுவிட்டது. நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டு விட்டது என ஆட்சியாளர்கள் சர்வதேச அரங்கில் நின்று கூறுகிறார்கள்.

ஏய் ... சர்வதேசமே! இதை நம்பாதே. பாதிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழினத்துக்கு சுதந்திரமும் கிடைக்கவில்லை. இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நீதியும் கிடைக்கவில்லை என உங்களால் சர்வதேச அரங்கில் நின்று கூறமுடியாது போனது ஏன்?

அவ்வாறெனின் நீங்கள் இலங்கை ஆட்சியாளர்களைப் பாதுகாக்க முற்படுகிறீர்கள் என்பது தானே பொருள்.


எதிரியின் பலம் எது? பலவீனம் எது? என்று தெரியாமல் குட்ட குட்ட குனியும் மூடர்களாய் நாம் இருந்தால் எமது இனத்தை எவராலும் காப்பாற்ற முடியாது.

இதைப்புரிந்து கொண்டால் சரி. இல்லையேல், தந்தை செல்வா கூறியதுபோல "தமிழினத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்றபதம் மெய்ப்பித்துவிடும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## காலை 6 முதல் மாலை 6 வரை ரியூசன் படிப்பு எண்டால்...

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் மூப்பரைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** என்ன இன்னமும் மூப்பரைக் காணவில்லை. டெங்கு மூப்பரையும் பிடிச்சிட்டுதோ.

**சாத்திரியார்:-** டெங்கைக் கட்டுப்படுத்திறதுக்கு படையினரைக் களமிறக்கப் போறதாகக் கூறப்படுகிறது.

அப்படிப் படையினர் களமிறங்கினால், முதலில் அவர்கள் யாழ்ப்பாணம் நாகவிகாரையின்ர விடுதிக்குப் பக்கத்தில இருக்கிற வாய்க்காலை ஒருக்கா எட்டிப் பார்க்கவேணும்.

**கங்காணி:-** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:-** நாகவிகாரையில இருந்து வாற தண்ணி முழுக்க அந்த வடிகாலுக்குள்ள விழுந்து தேங்கிநிற்குது. அது தவிர சோடாப் போத்தல்கள் உள்ளிட்ட அத்தனை கழிவுகளும் அதுக்குள்ள தான். ஆகையால முதலில நாகவிகாரையின்ர விருந்தினர் விடுதிக்குக் கிழக்குப் பக்கமாக இருக்கிற வடிகாலை ஒருக்காப் படையினர் துப்புரவு செய்தால் நல்லா இருக்கும்.

**விதானையார்:-** என்னைப் பொறுத்தவரையில வீதியில குப்பை கொட்டுகிறவியளைக் கைது செய்து அவர்களுக்குக் கடும் தண்டனை கொடுக்காத வரை யாழ்ப்பாணத்தில சுகாதாரத்தைப் பேணவே முடியாது.

**பண்டிதர்:-** விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. குப்பைகளைக் கொட்டக் கூடிய இடங்களை யாழ்ப்பாண மாநகரசபை அறிமுகப்படுத்தியிருக்குது. அந்த இடங்களில கொண்டு போய்க் குப்பைகளைப் போட முடியும். ஆனால், அதைச் செய்யிறதுக்கு எங்கட ஆட்களுக்கு விருப்பமில்லை. அதோட குப்பைகளைப் போடக் கூடிய இடங்கள் எங்கெங்க இருக்குதெண்ட விளம்பரங்களும் போதாமல் இருக்குது.

ஆகையால யாழ்ப்பாண மாநகரசபை, பொதுமக்கள் குப்பைகளைப் போடக் கூடிய இடங்களை எங்கும் விளம்பரப்படுத்த வேணும். அதைச் செய்வதன் மூலம் வீதிகளில் குப்பைகள் கொட்டப்படுவதைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

**சிறாப்பர்:-** அதோட இன்னொரு விடயத்தையும் கூறவேணும். யாழ்ப்பாணத்தில காக்கைதீவு றோட்டின்ர இரு மருங்கிலும் குப்பைகளும் ஆடு, மாட்டு எலும்புகளும் கோழி இறைச்சிக் கழிவுகளும் கொட்டப்பட்டு இருக்குது. அதால அந்தப் பக்கம் மிகப் பெரும் சுகாதாரச் சீர்கேட்டோட காணப்படுகிறது.

இதற்கு அடிப்படைக் காரணம் யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பகுதியில பொது மக்கள் குப்பை கொட்டுவதற்கென ஒரு இடமில்லாதது தான்.

ஆகையால காக்கைதீவுப் பகுதியில பொது மக்களும் நிறுவனங்களும் குப்பைகளைக் கொட்டுவதற்கு கட்டணம் எதுவுமற்ற ஓர் இடத்தை யாழ்ப்பாண மாநகரசபை ஒதுக்க வேணும்.

அதோட அந்த இடத்திற்கு வாகனங்கள் சென்று குப்பைகளைப் போடக் கூடிய வசதியும் இருக்க வேணும். அதன் பின்னர் அந்தக் குப்பைகளை உரிய இடங்களுக்கு மாநகரசபை அனுப்பலாம்.

இதைச் செய்வதன் மூலம் காக்கைதீவு, ஆனைக்கோட்டை, கல்லுண்டாய் வெளி ஆகிய பகுதிகளில பரவலாகக் குப்பை கொட்டுவது தடுக்கப்படுவதோட, ஆனைக்கோட்டை வயல்களில பொலித்தீன் குப்பைகளால ஏற்படுகின்ற இடுக்கண்ணும் தீரும்.

இவ்வாறு சிறாப்பர் கூற, ஆலடி சிறிது நேரம் நிசப்தமாகியது. நிசப்தத்தைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-** யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பகுதியில பொது மக்கள் குப்பை கொட்டுவதற்கு ஓர் இடம் ஒதுக்க வேணும்.

அதோட, யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் குப்பை கொட்டுவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களை எல்லோருக்கும் அறியப்படுத்துவது ஆகியவற்றை யாழ். மாநகரசபை செய்ய வேணுமெண்ட தீர்மானத்தை ஆலடியில நிறைவேற்றுவம் எனக் கூற, அத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தீர்மானம் நிறைவேறிய கையோட மூப்பர் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

என்ன மூப்பர் இண்டைக்கு லேற்றாப்போச்சுது. என்ன சங்கதி விதானையார் விசுவலிங்கம் வினவினார்.

**மூப்பர்:-** என்ர மகன் கொழும்புக்குப் போனதால என்ர பேரப்பிள்ளையை ரீயூசனுக்குக் கொண்டு போய் விட்டிட்டு வந்தனான்.

அது தான் லேட். திரும்பவும் போய் பிள்ளைய ஏத்த வேணும்.

**சாத்திரியார்:-** ஓ! இப்ப பெற்றார்களின்ர நேரத்தில கணிசமான நேரத்தை இந்த ரியூட்டரிகள் தானே கொள்வனவு செய்யினம்.

**வாத்தியார்:-** அதெண்டால் உண்மை தான். காலை 6 மணிக்கு வகுப்புகள் தொடங்கினால் முடிய இரவு 6 மணியாகுது.

காலைச் சாப்பாடும் இல்லாமல் தொடர்ந்தும் பிள்ளைகள் வகுப்புகளில இருக்கிற பரிதாபம்.

இப்படி வருசக் கணக்கில காலைச்சாப்பாடு இல்லாமல் தனியார் கல்வி நிறுவனங்களில இருந்து படிச்சால் அல்சர் தானே வரும்.

**விதானையார்:-** எங்கட படிப்பு என்பது எங்களை இழந்து படிக்கிறதாகத்தானே இருக்குது

**சிறாப்பர்:-** படிப்பு படிப்பு எண்டு பார்க்கிறமே தவிர; பிள்ளைகளின்ர ஆரோக்கியம், அவர்களின்ர ஓய்வு பற்றி நாங்கள் ஒரு போதும் கவனிக்கிறதுமில்லை. சிந்திக்கிறதுமில்லை.

**கங்காணி:-** உண்மையில காலைச் சாப்பாடு என்பது மிகவும் பிரதானமானது. ஆனால் எங்கட பிள்ளைகள் அதிலும் குறிப்பாக உயர்தரம் படிக்கிற எங்கட பிள்ளைகள் காலைச்சாப்பாடு சாப்பிடாமல் தானே தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் போகினம்.

இது அந்தப் பிள்ளைகளின்ர சிந்தனையில கடும் தாக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தும். ஆகையால பிள்ளைகள் காலைச்சாப்பாடு சாப்பிடுறதுக்கு ஓர் இடைவேளையை தனியார் கல்வி நிறுவனங்கள் வழங்க வேணும். படிக்கிறது வாழ்வதற்குத் தானே. வாழ்வதெண்டால், ஆரோக்கியம் தானே முக்கியம்.

**வாத்தியார்:-** அப்ப இதையும் ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவம்.

இவ்வாறு வாத்தியார் கூற, இடையில் குறுக்கிட்ட பண்டிதர்; வாத்தியார் இப்ப யாழ்ப்பாணத்தில டெங்கு மிக மோசமாக இருக்குது.

அதிலும் தனியார் கல்வி நிறுவனங்களில நுளம்புக் கடி தாங்க முடியவில்லை எண்டு மாணவர்கள் கூறுகினம்.

ஆகையால தனியார் கல்வி நிறுவனங்கள் தங்கட இடங்களில நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துறதோடு மருந்துகள் தெளித்து டெங்கு நுளம்பு இல்லாத ஒரு சூழலை ஏற்படுத்த வேணும் என்பதால இதையும் ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவம் எனக் கூற, மேற்படி இரண்டு தீர்மானங்களும் ஆலடியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட, அதற்குத் தனது ஆதரவும் இருப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தமிழருக்குப் பெருமை சேர்த்த சரிகமப இசை நிகழ்வில் வெற்றி வாகை சூடிய கில்மிஷாவிற்கு வாழ்த்துக் கூறுங்களேன் வியாசரே?

**திகான் வடமராட்சி**

**2023 இல் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு 2024 இல் எங்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு காலை உணவு-இரண்டு இறாத்தல் பாண், சம்பல், தேநீர் 600/-
மதிய உணவு-சோறு, பருப்பு, கத்தரிக்காய் குழம்பு, மீன்கறி 1400/-
இரவு உணவு-கோதுமை மா பிட்டு, ஒரு சாம்பாறு 500/-
குளிக்கும் சோப், உடுப்புத் துவைக்கும் சலவைப் பவுடர், தலைக்கு வைக்கும் சம்போ, இதர செலவுகள் 300/-
மின்சாரக்கட்டணம் 100 மொத்தம் 2900 /- ஒரு நாளுக்கு 2900 /- எனின் ஒரு மாதத்துக்கு 87000 /-
சாதாரண நடுத்தர வர்க்க குடும்பங்களால் இதைச் சமாளிக்க முடியுமா?
2023 வைத்துச் செய்தது. 2024 வைத்துத் துவைத்துச் செய்யப் போகிறது என்று மட்டும் புரிகிறது.

**சுரேசன் பத்தமேனி**

**பொருளாதார ரீதியில் நாடு முன்னேற வேண்டுமாயின் மக்களாகிய எமது பங்களிப்பு என்ன வியாசரே?**

நாடு இப்போது இருக்கும் நிலை மிக மோசமான நிலை. இந்நிலையில் அரசாங்கம் நாட்டின் மொத்தச் சுமையையும் நாட்டு மக்களின் முதுகில் இறக்கியிருப்பதை ஏற்றுக்கொள்ளவே முடியாது.
இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடு. இங்கு வாழும் மக்கள் அன்றாடம் உண்பதற்கே மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
அரசியலில் ஊழல் செய்து நாட்டின் மொத்த வளத்தையும் சூறையாடியவர்கள் இன்றும் சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஏழையின் வயிற்றில் அடித்து நாட்டை முன்னேற்றுவது பாம்பை அடித்து எலிக்குக் கொடுப்பதற்குச் சமம்.

**டனுஷாந் நடராசா திருநெல்வேலி**

**தமிழ் மக்களின் தலைவர் என்றால் அது பிரபாகரன் தான் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கூறியிருக்கிறாரே?**

சில விடயங்களை சிலர் கூறுவதற்கு அனுமதி இருக்கிறது. ஆனால் அதையே நாமும் கூறுவோமாக இருந்தால் நாம் நான்காம் மாடிக்குச் செல்ல வேண்டி வரும். ஆதலால் அவர் கூறிய விடயம் தமிழ் மக்களின் மனங்களைப் பிரதிபலிக்கும் விடயமாக இருந்தால் மகிழ்வுதானே.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**

**076 097 3126**

**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**விஜயதரன் உரும்பிராய்**

**அண்மைக் காலமாக மருத்துவமனைகளில் இள வயது மரணங்கள் பதிவாகியிருக்கின்றதே காரணம் என்னவாக இருக்கும் வியாசரே?**

என்ன செய்வது நாட்டின் வங்குரோத்து நிலை கண்டு திறமையான அனுபவம் வாய்ந்த வைத்தியர்கள் வெளிநாட்டுக்குச் சென்று விடுகிறார்கள்.
இதன் விளைவு சரியான நோயைச் சரியான நேரத்தில் கண்டறிவது சிரமமாகிறது.
இது நோயாளிகளை மரணத்துக்கு அழைத்துச் செல்கிறது.
இங்கு ஒரு விடயத்தை முன்னிலைப்படுத்த வேண்டும். அதாவது ஒரு மரணம் நடக்கிறது. மரணத்தில் சந்தேகம் நிலவுகிறது.
இறந்தவரின் உடற்பாகங்கள் உடற்கூற்றுக்காக கொழும்புக்கு அனுப்பப்படுகிறது.
அதன்பின்னர் அதன் நிலை எவ்வாறாக இருக்கின்றது என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயமே.



2023 இல் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு 2024 இல் எங்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

**திருத்துவன் மானிப்பாய்**

**வியாசரே ஜோக் ஒன்று சொல்லுவீர்களா பிளீஸ்?**

ஒருவர்: என்னடா தலையில கட்டுப் போட்டிருக்கிறாய். அடிகிடி பட்டிருச்சா?
மற்றையவர்: அதில்லையடா என் மனைவி இனிமேல் என்னை அடிக்க மாட்டேன் என்று தலையில் அடித்து சத்தியம் செய்தாள். அந்தக் கட்டுத்தான் இது.

☹ ☹ ☹

**சுதன் குப்பிழான்**

**ஏமாறுபவன் இருக்கும் வரை ஏமாத்துபவன் இருக்கவே செய்வான் என்பது இலங்கை ஆட்சியாளர்களுக்குப் பொருந்துமா வியாசரே?**

தமிழினத்துக்கு உரிமைகளைப் பெற்றுத்தருவதாகக் கூறி தமது அரசியலை பலப்படுத்திய பெரும்பான்மை ஆட்சியாளர்கள் ஒரு நாளும் திருந்தப் போவதில்லை.
அவ்வாறு அவர்கள் திருந்துவார்களாக இருந்தால் சூரியன் மேற்கே உதிக்கும்.
இவர்களை காலம் காலமாக நம்பும் தமிழ் அரசியல் தலைவர்களும் திருந்தப்போவதில்லை. இவர்கள் திருந்தினால் சூரியன் வடக்கே உதிக்கும்.
இந்த இரண்டும் நடக்காதபடியால் தமிழினத்துக்கான தீர்வு கிடைக்கப் போவது இல்லை. மீறிக் கிடைத்தால் அந்தத் தீர்வு தீர்வாக இருக்காது. மீண்டும் ஒரு பிரச்சினைக்கான திறவுகோலாகவே இருக்கும்.

**கனேஸ் பருத்தித்துறை**

**ஈழத்தமிழருக்குப் பெருமை சேர்த்த சரிகமப இசை நிகழ்வில் வெற்றி வாகை சூடிய கில்மிஷாவிற்கு வாழ்த்துக் கூறுங்களேன் வியாசரே?**

ஈழத்தின் பிள்ளை கில்மிஷா வெற்றி வாகை சூடிக் கொண்ட அந்தக்கணம் ஈழத் தமிழரின் வாழ்வில் மறக்க முடியாத தருணம் என்பதை இவ்விடத்தில் நான் அடித்துக் கூறுவேன்.
அந்தளவிற்கு கில்மிஷா வெற்றி பெற வேண்டும் என ஒட்டு மொத்த தமிழினமும் விரும்பியது, வேண்டுதல் செய்தது. அந்த விருப்பின், வேண்டுதலின் பலன் கில்மிஷா மகுடம் சூடினார்.
வென்றது எமது பிள்ளை. நாம் அவளைப் பாராட்ட வேண்டியதில்லை. அது தான் இந்த உலகமே அவளைப் பாராட்டிக் கொண்டிருக்கிறதே.
இந்த ஒரு நொடி போதுமே ஈழத் தமிழினத்தின் இருப்பைக் காட்டிவிட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : இருவர் உள்ளம்
பாடியவர் : பி.சுசீலா
பாடல் வரிகள் : கவிஞர் கண்ணதாசன்
இசை : கே.வி.மஹாதேவன்



**உருகி விட்ட மெழுகினிலே ஒளியேது?
உடைந்து விட்ட சிலையினிலே அழகேது?
பழுதுபட்ட கோவிலியே தெய்வமேது?
பனி படர்ந்த பாதையிலே பயணமேது?
இதய வீணை தூங்கும் போது பாட முடியுமா?**

---

இதய வீணை தூங்கும் போது பாட முடியுமா?
இதய வீணை தூங்கும் போது பாட முடியுமா?
இரண்டு கண்கள் இரண்டு காட்சி காண முடியுமா?
இதய வீணை தூங்கும் போது பாட முடியுமா?
இரண்டு கண்கள் இரண்டு காட்சி காண முடியுமா?
இதய வீணை தூங்கும் போது பாட முடியுமா?

உதடு சிரிக்கும் நேரம் உள்ளம் சிரிக்குமா?
உருவம் போடும் வேஷம் உண்மை ஆகுமா?
உதடு சிரிக்கும் நேரம் உள்ளம் சிரிக்குமா?
உருவம் போடும் வேஷம் உண்மை ஆகுமா?
விளக்கைக் குடத்தில் வைத்தால் வெளிச்சம் தோன்றுமா?
விளக்கைக் குடத்தில் வைத்தால் வெளிச்சம் தோன்றுமா?
வீட்டுக் குயிலைக் கூட்டில் வைத்தால் பாட்டுப்பாடுமா
பாட்டுப்பாடுமா?


இதய வீணை தூங்கும் போது பாட முடியுமா?
இரண்டு கண்கள் இரண்டு காட்சி காண முடியுமா?
இதய வீணை தூங்கும் போது பாட முடியுமா?

மனதை வைத்த இறைவன் அதில் நினைவை வைத்தானே சில
மனிதர்களை அறிந்து கொள்ளும் அறிவை வைத்தானே
மனதை வைத்த இறைவன் அதில் நினைவை வைத்தானே சில
மனிதர்களை அறிந்து கொள்ளும் அறிவை வைத்தானே
அறிவை வைத்த இறைவன் மேனி அழகை வைத்தானே
அறிவை வைத்த இறைவன் மேனி அழகை வைத்தானே
அழகு கண்ட மனிதன் பெண்ணை அடிமை செய்தானே
அடிமை செய்தானே

இதய வீணை தூங்கும் போது பாட முடியுமா?
இரண்டு கண்கள் இரண்டு காட்சி காண முடியுமா?
இதய வீணை தூங்கும் போது பாட முடியுமா?

உருகி விட்ட மெழுகினிலே ஒளியேது?
உடைந்து விட்ட சிலையினிலே அழகேது?
பழுதுபட்ட கொவிலியே தெய்வமேது?
பனி படர்ந்த பாதையிலே பயணமேது?
இதய வீணை தூங்கும் போது பாட முடியுமா?

# இன்றைய மாணவர் சமூகம்



**"வகுப்பறைகளிலும் சரி வகுப்பறைக்கு வெளியிலும் சரி இன்றைய மாணவர்களின் நிலையை உற்று நோக்கினால் அவர்கள் ஏதோ ஒரு பிரச்சினைக்கு முகங்கொடுக்கிறார்கள் என்பது புலப்படும்."**

மாணவர் பருவம் என்பது மனித வாழ்வின் ஒரு முக்கிய பருவமாகும். "கேளாய் மகனே கௌ்ளொரு" வார்த்தை நாளை உலகின் நாயகன் நீயே எனும் பாடல் வரிகள் இதனையே உணர்த்துகின்றன. மாணவர்கள் என்பதற்கான வரைவிலக்கணம் கற்கும் வயதினர் அல்லது கற்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் என்பதாகும். மாணவன் எவ்வாறு கற்கவேண்டும் என்பது உபநிடதத்தில் (வேதத்தின் உப பிரிவு) தெளிவாக கூறப்பட்டுள்ளது. குருவிற்கு நெருக்கமாக இருந்து அவர் கூறுபவற்றை செவிமடுத்து மனதில் பதிப்பது கற்கும் விதிமுறையாகும். மகாபாரதத்தில் பாண்டவர் குருகுலம். இராமாயணத்தில் ராமன், தம்பியர் குருகுலம் என பல குருகுலவாழ்க்கை முறைகளை இந்து சமயம் கூறுகிறது.

அன்றைய மாணவர் குருவோடு குருகுலத்தில் வாசம் செய்தான். இன்று மாணவர்கள் சமூகத்தோடு வாழ்ந்து கொண்டே கற்கின்றார்கள். இதனால் அவர்களில் பலர் சமூக நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளார்கள்.

பண்பாட்டுப் பிறழ்வுகள் முதல் மொழிப் பிரயோகங்கள் வரை மாணவர் மத்தியில் பல நெருக்கீடுகள் இருக்கின்றன. அத்துடன் போதை வஸ்துப் பயன்பாடும் அதீத தொடர்புசாதன வளர்ச்சி, அதனால் ஏற்படுத்தப்படும் சமூக ஒழுங்கீனங்களும் மாணவர் மத்தியில் மன நெருக்கீடுகளை ஏற்படுத்துகின்றன. இயல்பாகவே தியான,யோக பயிற்சிகள் மூலம் மன அடக்கம் உள்ள சில மாணவர்கள் தவிர ஏனைய மாணவர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக தவறான பழக்கவழக்கங்கள் அதனால் தவறான வாழ்க்கைத் தடங்கள் என தங்களைத் தாங்களே சீரழிக்கின்றார்கள். அதிலும் பதின்மர் வயதினர் அதிகம் சீரழிகின்றனர்.

சமூகத்திலும் வழிகாட்டுதல் இல்லை. பாடசாலையிலும் வழிகாட்டல்களை கடைப்பிடிக்காமல், மாணவர் உரிமை என்னும் பெயரில் ஆசிரியர்களால் வழங்கப்படும் சாதாரண தண்டனைகளும் குற்றமாக கருதப்படுவது ஏற்புடையதல்ல.

தற்கால மாணவர்களின் நடத்தைக் கோலங்கள் சமுதாய பண்பாட்டு விழுமியங்களுக்கு முரணானதாகவே காணப்படுகிறது. மாணவர்கள் அநேகர் நவீனதொலைபேசி பாவனைக்கு அடிமைகளாக உள்ளனர். அதிலும் அறிவுசார்ந்த விடயங்கள் பல தொலைபேசிகள் ஊடாக பெறக் கூடியதாக இருந்தாலும் மாணவர்கள் பிழையான வழிகாட்டல்களைச் செய்யக் கூடிய விடயங்களையே அதிக நேரம் தொலைபேசிகளில் தேடுதல் செய்கிறார்கள். இது அவர்களை தவறான பழக்கவழக்கங்களுக்கு அடிமையாக்கியதுடன் அவர்களின் எதிர்காலத்தை இருட்டாக்கிவிடும்.

தற்கால மாணவர்களில் ஒரு பகுதியினர் எதிர் நோக்கும் இன்னொரு பிரச்சினை போதை வஸ்து பாவனையாகும். இன்று கிராமம் முதல் நகரங்கள் வரை போதை வஸ்துக்களை பல்வேறு வடிவங்களில் வழங்க பல முகவர்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறார்கள். மாணவர்களை இலக்கு வைத்து போதை வஸ்து விற்பனை இன்று மும்முரமாக இடம் பெற்றுவருகிறது. தற்போதைய நாட்டின் அரசியல், பொருளாதார நிலைகளும் மாணவர்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்துகிறது. இன்றைய பொருளாதார சூழல் காரணமாக நாட்டில் காணப்படும் மந்தபோசணை, வறுமை, ஊட்டச்சத்தான உணவின்மை என்பதும் மாணவர்களை அதிகம் பாதிக்கிறது. ஔவைப்பாட்டி சொன்னது போல் "கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது" என்பதை இவ்விடத்தில் நாம் நினைவு கொள்ளவேண்டும்.

மேற்கூறிய காரணங்களால் வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர்கள் ஈடுபடும் போது மாணவர்கள் மத்தியில் அமைதியின்மை காணப்படுவதும் அவர்கள் கற்பிக்கும் பாடங்களை செவிமடுக்காமல் இருப்பதுடன் சக மாணவர்கள் செவிமடுப்பதற்கும் தடையாகவும் இருக்கிறார்கள்.

ஒழுக்கமற்ற மாணவர்களை வழிப்படுத்த அதிபர்,ஆசிரியர்கள் கடும் முயற்சி எடுக்க வேண்டியுள்ளது. எனினும் அநேகமாக அதிபர், ஆசிரியர்கள் இதில் தோற்றும் போகின்றார்கள். தற்போது சமய,சமூக விழுமியங்களை மதிக்காத அல்லது பின்பற்ற மறுக்கும் மாணவ சமுதாயமே உருவாகிக் கொண்டிருக்கின்றது. மாணவர்கள் கைகளில் நாட்டின் எதிர்காலம். இந்த நிலையில் நல்ல மாணவர்களை எப்படி உருவாக்குவது? இந்த பிரச்சினையை எமது சமய, சமூக, அரசியல் பிரமுகர்கள் எப்படி தீர்க்கப் போகிறார்கள்? எதிர்காலம் சவாலுக்குரியதே. இங்கு ஏற்படப் போகும் முக்கிய பிரச்சினை எமது எதிர்கால சமூகம் எப்படியாக இருக்கும் என்பதாகும்.

**சுப்பிரமணியம் யசீலன்,
ஆசிரியர்,
யா/வல்வெட்டி இ.த.க பாடசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவிகள் அட்டகாசம் செய்யும் ஒரு சினிமா. அக்கம் பக்கம் நூற்றுக்கும் மேலான மனிதர்கள் அமர்ந்திருக் கிறார்கள். திரைக்குப் பின்னே எதுவும் கிடையாது என்ப தும் ஒளிக்கற்றை மூலமே பேய் உருவங்கள் தோன்று கிறது என்பதும் சர்வநிச்சயமாகத் தெரியும். ஆனாலும், படம் பார்க்கும்போது பலருக்கும் பயம் வருகிறது.

திரையரங்கினுள் பேய் இல்லை என்று தெரிந்தாலும் பயப்படுவதற்குக் காரணம் தெரியுமா? சின்ன வயதில் இருந்து பேய் பற்றி கற்பிக்கப்பட்ட நம்பிக்கைகளும் மரணம் பற்றிய அச்சமும்தான்.

திரையில் காணப்படும் பேய் உண்மை இல்லை என் றாலும், பேய் இருப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக நம்புகிறான் மனிதன். தான் இதுவரை காணாத பேய் எப்படியிருக்கும் என்பதை அறிந்து கொள்ளும் ஆவலில் தான், பேய்ப்படம் பார்க்கிறான் மனிதன். ஒரு பேய் படத்தைப் பார்த்து முடித் ததும் ஏதோ சாதனை புரிந்தது போல் சந்தோஷப்படுகி றான். இன்னும் சொல்லப் போனால் மது குடிப்பதில் கிடைக் கும் போதையைப் போன்று பேய் படம் பார்த்து, கொஞ்சம் இன்பமும், உள்ளூர கொஞ்சம் பயமும் அடைகிறான். படம் பார்ப்பதால் தன்னுடைய உயிருக்கு எந்த ஆபத்தும் வராது என்பது உறுதியாகத் தெரிவதால்தான் படம் பார்க்க முன்வருகிறான். அதேநேரம் பயப்படவும் செய்கிறான். இது போன்ற பயங்களுக்கான அடிப்படை மரணம் பற்றிய அச்சம் என்பதை விளக்குவதற்காக இந்த உண்மை சம்பவம்.

# பேய் இருக்கிறதா... இல்லையா..?



ஒரு கிராமத்துக்கு வெளியே இருந்த கிணற்றில் விழுந்து அடிக்கடி சிலர் தற்கொலை செய்துகொண்டார்கள். அதனால் உள்ளூர்க்காரர்கள் அந்தக் கிணற்றுத் தண்ணீரை பயன்படுத்துவதே இல்லை. ராத்திரி நேரங்களில் அந்தக் கிணற்றில் ஆவிகள் அழுதுபுலம்பும் சத்தம் கேட்பதாக பேச்சு உண்டு. அதனால் இரவு நேரங்களில் அந்தக் கிணற்றின் பக்கம் ஊர் மக்கள் யாரும் செல்வது இல்லை. இதை நம்பாமல் பகலில் அந்தக் கிணற்றில் குளித்த ஒருவன் சில வாரத்திலேயே எதிர்பாராதவிதமாக மரணத்தை தழுவினான். அதனால் அந்த ஊர் மக்களைப் பொறுத்தவரை அந்தக் கிணறு என்பது பேய்களின் கல்லறை.

இப்படிப்பட்ட நேரத்தில் இரண்டு நண்பர்கள் அந்தக் கிராமத்துக்கு புடவை வியாபாரம் செய்வதற்கு வந்தார்கள். வரும் வழியில் கிணற்றைப் பார்த்ததும் அவர்களுக்கு குளிக்கும் ஆசை வந்தது. இருவரும் உள்ளே இறங்கி சந்தோஷமாகக் குளித்து முடித்து வெளியே வந்தார்கள். கிணற்றை சுற்றி நின்று ஊர் மக்கள் ஆச்சரியமாகப் பார்ப்பதைக் கண்டு நண்பர்கள் திகைத்தார்கள். காரணம் கேட்டார்கள். அப்போதுதான் பேய் விவகாரம் அவர்க ளுக்குத் தெரியவந்தது.

இருவரும் அதிர்ச்சி அடைந்தாலும் ஒருவன் உடனே சுதாரித்துக்கொண்டான். கிணற்றில் பேய் இருக்கிறது என்றால், உள்ளே குளித்ததும் என்னை பிடித்திருக்க வேண்டும். அப்படியெதுவும் நடக்கவில்லை என்று சிரித்தபடி சொன்னான். வேண்டுமென்றால் நான் இந்த ஊரிலேயே சில நாட்கள் தங்குகிறேன். எனக்கு எதுவும் நடக்கவில்லை என்பதைத் தெரிந்துகொண்டு நீங்களும் பேய் இல்லை என்ற முடிவுக்கு வாருங்கள் என்று சொன்னான்.

இன்னொரு நண்பனால் பேய் விவகாரத்தை அத் தனை எளிதாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. தேவையில்லாமல் ஆவியின் கோபத்துக்கு ஆளா கக்கூடாது என்று பயந்தான். உடனடியாக ஊருக்குத் திரும்பி ஆவியின் கோபத்தில் இருந்து தப்புவதற்காக பரிகாரம் செய்யப்போகிறேன் என்று கிளம்பிவிட்டான்.

(ஆவிக்கதை அடுத்த வாரம் தொடரும்)



# வித்தியாச புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்!

**ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு கலாசாரம் உண்டு. அதற்கேற்ப பண்டிகைகளும் வித்தியாச மானதாகவே இருக்கும். ஆனால், உலகமெங்கும் ஒரே நாளில் கொண்டாடப்படும் புத்தாண்டு நாடு களில் தனித்துவமான முறைகளில் கொண்டா டப்படுகிறது.**

## வட்டத்தை விரும்பும் பிலிப்பைன்ஸ்

'வாழ்க்கை ஒரு வட்டம்' என்பதை பிலிப்பை ன்ஸ் மக்கள் நம்புவார்கள் போல... அதற்காகவே மகிழ்ச்சியான புத்தாண்டை உறுதிப்படுத்த வட்ட வடிவங்களைக் கொண்ட ஆடைகளை அணிவது, வட்டமாக இருக்கும் பழங்களைச் சாப்பிடுவது, நாணயங்களைக் கைகளில் வைத்திருப்பது என்கிற வழக்கத்தைக் கொண்டுள்ளார்கள். இதனால், வளமும் நல்ல அதிர்ஷ்டமும் கிடைக்கும் என்கிறார்கள். கூடுதலாக நள்ளிரவு வந்தவுடன் குழந்தைகளை முடிந்த அளவு குதிக்கச் சொல்கி றார்கள். புத்தாண்டில் குதித்தால் உயரமாக வளர முடியும் என்பதும் அவர்களது நம்பிக்கை.

## ஜப்பானின் 108 மணியோசைகள்

ஜப்பானில் ஆங்கிலப் புத்தாண்டு ஒமிசோகா எனப்படுகிறது. டிசெம்பர் 31 அன்று பௌத்த கோயில் களில் 108 மணியோசைகள் எழுப்பிப் புதிய ஆண்டு வரவேற்கப்படுகிறது. இது ஜோயா நோகேன் எனப்படும் பௌத்த சடங்கு முறையாகும். இதன்மூலம், மனிதர்களிடத்தில் உள்ள 108 தீய உணர்வுகள் அகலும் என்பது நம்பிக்கை. ஜப்பா னியர்கள் இந்த மணியை அடித்து முந்தைய ஆண்டின் பாவங்களிலிருந்து தங்களைத் தூய் மைப்படுத்திக் கொள்கிறார்கள். மன்னிப்பு கேட்க விரும்பும் பாவங்கள் பற்றி மணி ஒலிக்கும்போது சிந்திப்பார்களாம்.

## ஸ்பெயினின் 12 அதிர்ஷ்ட திராட்சைகள்

புத்தாண்டு இரவில் 12 திராட்சைகளைச் சாப்பிடுவதன் மூலம் நல்ல அதிர்ஷ்டம் கிடைக்கும் என்பது இங்கே பாரம்பரியமாக நம்பப்படுகிறது. ஒவ்வொரு திராட்சையும் ஒவ்வொரு மாதத்தைக் குறிக்கிறது. எனவே 12 திராட்சைகளைச் சாப்பிடுகிறார்கள். புத்தாண்டு இரவுக் கொண் டாட்டத்தின் முக்கியமான பகுதியாக இருக்கும் இந்த நிகழ்வைப் பல குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டாடுகிறார்கள். இனிப்பும் புளிப்பும் கலந்ததுதான் வாழ்க்கை என்பதை இதன் மூலம் ஏற்றுக் கொள்ளும் இந்த வழக்கம் 1909இல் உரு வானது என்கிறார்கள்.

## தட்டுகளை உடைக்கும் டென்மார்க்

பிளேட்டுகளை உடைக்கும் இந்தப் பாரம்பரி யம் 16ஆம் நூற்றாண்டில் தொடங்கியதாம். டேனிஷ் மக்கள் ஆண்டு முழுவதும் பயன்படுத்தப்படாத தட்டுகளை டிசெம்பர் 31 இரவு வீட்டின் முன் வீசி உடைக்கிறார்கள். இதனால் புத்தாண்டு நல்ல அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும் என்று நம்புகிறார் கள். இந்த நிகழ்வுக்கு முன்பு பிரார்த்தனையும் செய்கிறார்கள். இந்தப் பாரம்பரியம் டென்மார்க் தாண்டி சுவீடன், நோர்வே, ஐஸ்லாந்து உள்ளிட்ட பல நாடுகளிலும் இன்று பரவிவிட்டது.

## பொம்மைகளை எரிக்கும் ஈக்வடார்

பயமுறுத்தும் உருவங்களை மக்கள் உரு வாக்குகிறார்கள். அந்த உருவத்தை பழைய ஆடைகள், செய்தித்தாள், மரத்தூள் கொண்டு அடைத்து அதன் மேலே ஒரு முகமூடி பொருத்தி விடுவார்கள். புத்தாண்டு தினத்தன்று இந்த பொம்மைகள் தீ வைக்கப்படுகின்றன. இந்த நிகழ்வை 'அனோ வீஜோ' என்று அழைக் கிறார்கள். ஒரு குறியீடாகவும் துரதிர்ஷ்டத்தை விரட்டுவதாகவும் இந்த நிகழ்வு பாரம்பரியமாகக் கொண்டாடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## உள்ளமே தெளிவு கொள்

இனியாருடன் கனிவுடன் பழகிக் கொள்
இன்னாருடன் விவேகத்துடன் செயற்படு
தன்நிலை மறந்து சீற்றம் கொள்ளாதே
சுற்றம் இன்றி தனிமை கொள்வாய்
அளவுக்கு மீறி பரிவு கொள்ளாதே
வரையறையின்றி சரிவு கொள்வாய்
குறிக்கோள் அடையும் வரை முயற்சி செய்
வீழ்ச்சி என்று முடங்காதே
உடைமை உள்ள வரை உண்டி கொடு
அதை விட ஏற்றம் வேறு ஏது?

தே.அபிநயா, எழுதுமட்டுவாழ்.

## யாழ் ராணியே



மகுடம் சூடிய மகாராணியே
மனதை ஈர்த்த யுவராணியே
ஈழத்தின் குரல் எழில் ராணியே
இமயம் தொட்ட இளையராணியே

தமிழ் தந்த தவராணியே
தடம் பதித்த தமிழ் ராணியே
யாழில் மலர்ந்த யாழ் ராணியே
யாம்மறிந்த புகழ் ராணியே

வார்த்தை ஜாலத்தின் வதனராணியே
வையகம் போற்றும் வசந்த ராணியே
குரலால் வசமாக்கிய குகராணியே
கூவும் குயிலானாய் ஈழராணியே

உலகம் சுவைத்த உதயராணியே
உணர்வால் உயர்ந்த சின்னராணியே
தமிழ் தாய் தந்த தனராணியே
கலைதாய் உதிர்ந்த கலைராணி நீயே
வாழ்க உன் புகழ் இம்மண்ணில்
நீ வாழும் வரை

பி.துரையரசன்,
ஒட்டுசுட்டான்.

## கல்விக்கு வயது இல்லை

காலனித்துவ காலம் கல்வியை
பாரபட்சமாக வழங்கினாலும்
சுதந்திர காலம் கல்வி
அனைவருக்கும் சமம்
என்பதை உணர்த்தியது
வயதை தாண்டி சாதிக்க நினைக்கும்
ஒவ்வொருவருக்கும்
தடைக்கற்கள் என்பது ஏராளமே
ஊக்குவிக்கக்கூடிய உறவுகளும்
வழிநடத்தும் ஆசான்களும்
வழிநடுவே சேர்ந்து பயணிக்கும்
சக மாணாக்கர்களும்
திறம்பட அமையப்பெற்றால்
தடைக்கற்கள் இலகுவில்
தகர்த்தெறியப்படும்
கல்விக்கு வயதில்லை என்பது
என் ஆசான் அழகாகக் கூறிய கூற்று
இக்கூற்று ஒவ்வொருவரிடத்திலும்
உணரப்பட்டால்
இளமையில் கல்வி மட்டும்
சிலையில் எழுத்தாகாது
முதுமையில் கல்வியும்
சிலையில் எழுத்தாக மாறும்



புஸ்பாகரன்–பிரமிலா

## மௌனத்தின் தேடல்-697



### நீரின்றி அமையாது உலகம்

நீரின் மகத்துவத்தை
நீயும் உணர்ந்திடுவாய்
தாகத்திற்கு தண்ணீரும் பசிக்கும் உணவுமின்றி
தரணியில் உயிரினங்கள் வாழ உண்டா?
தாகம் தீர கையிலேந்தி நீரருந்தி
புன் சிரிப்புடன் பூரிப்படையும்
சிறுமியின் நிலையை எண்ணிப் பாரீர்
நீரின்றி அமையாது உலகம் என்பதை
நீரும் உணர்ந்திடுவீர்

ஆ.செல்வி, திருநாவலூர்.

### பருக நீர் பஞ்சம்

நீரின்றி அசையாதுலகென்ற
தெய்வப் புலவர் கூற்றது
உண்மையாயிருந்தும்
நன்நீரின்றி அல்லல்
அடைகின்றோம் நாமிங்கு
நீர்வளம் நிறை நாட்டில்
நீர் கிடையாத
அவலத்துள் நாம் பலர்
கிடைத்தால் ஆனந்தமே

சி.இ.அன்புதுரை, மானிப்பாய்.

### பருகல் அழகென்றோ

இடுப்பிற் குடம் சுமந்து
இயற்கைத் தூயநீர் பெற்று
நோயின்றி அவனி வாழ்
சீர் குலத்துவழி மகளே...!
செயற்கை மாசுநீர்
பருகல் அழகென்றோ
புகைப்படக் கருவிமுன்
புன்னகை முகம் –நீ
இயைந்து காட்டுகிறாய்

செ.பன்னீர்ச்செல்வம், நல்லூர்.

### தாகம் தீர்க்கும் தங்கை

இருகரம் ஏந்தி - இருவழி
மலர்ந்து நீர் அருந்தும் தங்கையே!
தண்ணீர்க் குழாயை பேணிக் காத்து
இனிவரும் சகோதரர்கள் தாகம்
தீர்த்து மகிழ்வுறும் நிலை - உன்
கையிலும் உண்டம்மா
சேதமுற்ற குழாயை திருத்தவும்,
பல குழாய்கள் அமைக்கவும்
வழி சமைப்பாய் உன் எதிர் காலத்தில்

அபி இலம்ரலிகா, சித்தன்கேணி.

### என்ன செய்வாள்!


புத்தகப் பைக்குள் கூடவே
ஒரு குடிநீர்ப் போத்தல்
சத்தான பழரசப் பாணி
கொண்டுவரும் உன்
அன்புக் கல்லூரித் தோழி
நீ அகங்கையால் அள்ளி
நீர் அருந்தும் காட்சி கண்டால்
உன்னை அணைப்பாளா!
இல்லை அகம்பாவம் கொள்வாளா?

பி.யதுர்சன், கொக்குவில்.

### வரியும் வலியும்

கால தாமதங்கள் சிறிது மின்றி
தாகத்தைத் தணிக்கும் தண்ணீர்
மாணவ மணிகளுக்கு அடிக்கடி
மதிய உணவாவது விதியின்செயல்
வரி வகைகள் வரிசையாய் உயர
விலை வாசியும் சிகரம் தொட்டது
கடன் கொடுத்துக் காப்பாற்றியவரின்
உடன்பாட்டை மதித்தால் மட்டுமே
இன்றில்லா விட்டாலும் கட்டாயம்
நன்றாகும் நாளை நமதாகும்

க.நாகராசா, நுணாவில்.



### நீயும் குழாயும்

வறுமை கீறிய கோடுகள்
உன் முகத்தில் மட்டுமல்ல
குடிநீர்க் குழாயிலும் தெரிகிறது.

பி.மதுஷ்சன், தையிட்டி.

## மௌனத்தின் தேடல்- 698



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம், இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

என்று வினவினான் இளையபல்லவன் உறுதியான குரலில்.

"ஆம்."

"நான் மரணத்துக்கு அஞ்சாதவன் என்ற விவரம் மட்டும் உங்கள் காதுக்கு எட்டவில்லையா?"

"அதுவும் எட்டியிருக்கிறது."

"அப்படியிருக்க இஷ்ட விரோதமாக என்னை யார் எதைச் செய்யக் கட்டாயப்படுத்த முடியும்?"

மஞ்சளழகி சற்று நிதானித்தாள். பிறகு சற்றே குரல் நடுங்கச் சொன்னாள். 'இந்த மரணம் சாதாரண மரணமல்ல" என்று.

"சாதாரண மரணமல்ல வென்றால், சித்திரவதை செய்வார்களா?" என்று வினவினான் படைத்தலைவன்.

"சித்திரவதையென்பது சாமானிய வார்த்தை."

"அதைவிடக் கடுமை தரும் மரணமா?"

"ஆம், இளையபல்லவரே! மிகவும் கொடிய மரணம். என் விரோதிக்குக்கூட அத்தகைய மரணம் விளைவதை நான் விரும்பமாட்டேன். நன்றாகக் கேளுங்கள் விளையக்கூடிய கொடுமையை," என்ற மஞ்சளழகி, "அதோ அந்தக் கோட்டையின் மத்திய பகுதியைக் கவனியுங்கள்," என்று தன் கையால் சுட்டிக் காட்டினாள்.

தலையைத் திருப்பி அந்தப் பகுதியைப் பார்த்த இளையபல்லவன், "ஆம் அங்கொரு பெரும் கொடிபறக்கிறது." என்றான்.

"அந்தக் கொடி எந்த நாட்டுக் கொடியென்பதை பார்த்தீர்களா?" என்று கேட்டாள் மஞ்சளழகி.

"பார்த்தேன். அது சொர்ண பூமியின் கொடியல்ல. ஸ்ரீ விஜய சாம்ராஜ்ய சின்னமாகத் தோன்றவில்லை அது." என்றான் இளையபல்லவன்.

"இல்லை. ஸ்ரீவிஜயத்தின் கொடி அல்ல அது, அக்கொடி இதோ இருக்கிறது." என்று வேறொரு பகுதியில் பறந்து கொண்டிருந்த கொடியைச் சுட்டிக்காட்டினாள் மஞ்சளழகி.

இரண்டு கொடிகளையும் மாறி மாறிப் பார்த்த இளையபல்லவன், "ஆம் ! ஆம்! இரண்டு கொடிகளுக்கும் பெரும் வித்தியாசமிருக்கிறது." என்று கூறினான்." "அந்தக் கொடி யாருடையது?" என்று வினவினான்.

"இந்தநாட்டுப் பூர்வகுடிகளில் பெரும் பகுதியினரான பதக் ஜாதியினரின் கொடி அது" என்று சொன்னாள் மஞ்சளழகி.

இளையபல்லவன் விழிகளில் ஆச்சரியம் தெரிந்தது. "அரசாங்கக் கொடியிருக்கும் கோட்டையுள் இன்னொரு கொடி அனுமதிக்கப்படுகிறதா?" என்று ஆச்சரியம் குரலி




காலத்தின் பதிவு 91

## உடைந்த கவசம்

லும் பூர்ணமாகப் பிரதிபலிக்கக் கேட்டான் அவன்.

"சாதாரணமாக அனுமதிக்கப்படுவதில்லை, விசேஷ காலங்களில் அனுமதிக்கப்படுகிறது. முக்கியமாக விசாரணைக்கு பூர்வாங்கமாக இக்கொடி உயர்த்தப்படும்."

"ஏன்?"

"இங்கு இன்னும் பதக் இனத்தவரின் சட்டதிட்டங்கள்தான் பழக்கத்தில் இருந்து வருகின்றன. ஸ்ரீவிஜயத்தின் நாகரிகப் பழக்கங்கள் இன்னும் இங்கு வழக்கத்துக்கு வரவில்லை. ஆகவே முக்கிய விசாரணைக் காலங்களில் அரசாங்கத்தாரே பதக்குகளின் கொடியை உயர்த்துகிறார்கள். அவர்கள் வழக்கப்படித்தான் விசாரணை நடக்கும். அவர்கள் வழக்கப்படித்தான் தண்டனையும் அளிக்கப்படும்."

"அப்படியா?" "ஆம். கொடியை உயர்த்த முக்கிய காரணமுண்டு."

"என்ன காரணம்?"

"சுற்றுப்புறமுள்ள பதக்குகளை வரவழைக்க இது ஒரு வழி. இந்தக் கொடி உயர்த்தப்பட்ட மறுவிநாடி இங்கிருந்து பதக்குகளின் இருப்பிடங்களுக்கு ஒற்றர்கள் பறந்துவிடுவார்கள். விசாரணையின் போது பதக் இனத்தாரின் பெண்களும், ஆண்களும் பெருவாரியாக வந்து கூடுவார்கள். ஆசையுடன் எதிர்பார்ப்பார்கள்."

(தொடரும்...)

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 37

"முட்டு வேன்கொல் தாக்கு வேண்கொல்
ஓரேன் யானுமோர் பொற்றிமேலிட்டு
ஆஅ வொல்லெனக் கூவு வேன்கொல்
அலமரலசைவளி அலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சு மூர்க்கே."
(குறுந்தொகை 28)

என்று சங்கத் தலைமகள் கூட தன் காதல் நோயால் கையறவுள்ளாளன்றி வெளியே விளம்பினாளல்லள்.

ஆனால், பெரியாழ்வாரின் இலக்கிய உத்தி, பெண்ணைப் பேச வைத்துவிடுகிறது.

பாரதியாரின் உத்தியோ, பெண்ணின் உயவு நோயைப் பாடவே வைத்துவிடுகிறது. துணிந்து தூதும் அனுப்புகிறது.

"ஆற்றங் கரையதனில் முன்னமொருநாள்–எனை
அழைத்துத் தனியிடத்தில் பேசியதெல்லாம்
தூற்றி நகர்முரசு சாற்றுவனென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம்!"

## பாரதியின் பின்புலங்கள்



என்று பெண்மையின் உச்சியில் நின்று அவள் பேசுகிறபோதும், அவளே பிறகு சினந் தணிந்து, மனங் கனிந்து ஏங்கி, இரங்கி

"கண்ணன் முகமறந்து போனால் – இந்தக்
கண்கள் இருந்துபயன் உண்டோ?
வண்ணப் படமுமில்லை கண்டாய் – இனி
வாழும் வகையென்னடி தோழி!"

என்று தவிக்கிற போதும், கவிஞனின் பாவனை, உணர்ச்சியின் கொடுமுடியிலிருந்து சொற்களைச் சுண்டிவிடுகிறது.

காதலியை - அதாவது கண்ணனைக் காதலிப்பதற்காகச் செய்த கண்ணம்மாவை உவமித்துப் பாடுகிற பாடல் முழுவதிலும் உலக ஒருமையைக் காட்டி விடுகிறது கவிதை மனம். கண்ணம்மா என்ற காதலிக்குச் சந்திர சூரிய கோள்களே விழிகள் வானக்கருமையே விழி நிறம்: சோலைப் பூக்களெல்லாம் அவள் சுந்தரப் புன்னகையே!

சிதம்பர ரகுநாதன் தனது கங்கையும் காவிரியும் எனும் நூலில் குறிப்பிடுவது போல், "தனது காதலியை இந்தப் பேரண்டத்தின் பிரதிபிம்பமாகவே காண்கிறான் பாரதி"

"சுட்டும் விழிச் சுடர்தான் – கண்ணம்மா
சூரிய சந்திரரோ
வட்டக் கரியவிழி – கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ
பட்டுக் கருநீலப் – புடவை
பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில் – தெரியும்
நட்சத் திரங்களடி!"

என்ற உருவக ஓட்டம், புறத்தோற்றத்தில் வெறும் காதல் வருணனைக் கவிதையாகவே தெரிகிறது. ஆனால் கவிதை சொற்களால் மட்டும் அமைவதில்லை.

ஆங்கிலக் கவிஞன் யீட்ஸ் சொல்வது போல, "கவிதை சொற்களில் இல்லை, சொற்களுக்கிடையில் இருக்கிறது."

("Poetry is not in the words it is in between the words" -WB yeats)

இறைவனே காலையும், பகலும், மாலையும் என்ற தொனிப் பொருள் தர.

"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு
மாலையே போன்றிலங்கும் தாழ்சடை"

என்று அற்புதத் திருவந்தாதியில் காரைக்கால் அம்மையார் பாடுவதும் இந்தக் கோணத்திற்கு மூலக் கவிதையாகிறது. என்று கொள்ள இடமுண்டு என்கிறார் திரு.அ.ச.ஞானசம்பந்தன் தம் 'இன்றைய இலக்கியம்' என்ற நூலில்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

380

வலம்புரியின் மருத்துவச்சுபர்

## கர்ப்பிணிப் பெண்கள் பப்பாளிப்பழத்தை உட்கொள்ளலாமா?



ஒரு பெண் கருத்தரித்த காலத்தில் இருந்து அவள் குழந்தையைப் பிரசவிக்கும் வரையான காலப்பகுதி கர்ப்ப காலம் என வரையறுக்கப் படுகிறது.

இதனால் இக்காலப் பகுதி பெண்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. குறித்த காலப்பகுதியில் தாயினதும் சிசுவினதும் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு ஊட்டச்சத்து மிகுந்த பழங்கள், காய்கறி, இலைக் கறிவகைகள் உள்ளடக்கிய உணவுகளை உணவு வேளைகளில் உள்ளடக்கிக் கொள்ளல் வேண்டும்.

இருந்த போதிலும் கர்ப்பவதிகள் குறித்த காலப்பகுதியில் சேர்த்துக் கொள்ள வேண்டிய மற்றும் தவிர்த்துக் கொள்ள வேண்டிய உணவுகள் தொடர்பாக அதீத கவனம் செலுத்துவது வழமையானதொன்றேயாகும். இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் கர்ப்பிணிகளினால் பாரம்பரியமாக தவிர்க்கப்படும் உணவுகளில் பப்பாளி முதலிடம் வகிக்கிறது.

இதனை உட்கொள்வதனால் கருச்சிதைவு ஏற்படக்கூடும் என்ற தவறான நம்பிக்கையே இதற்குக் காரணமாகிறது.

இது ஏன் தவறான நம்பிக்கை என்று இக்கட்டுரையில் சற்று அறிவியல் ரீதியாக நோக்குவோம். பப்பாளியானது லட்டக்ஸ் (Latex) எனும் பதார்த்தத்தை குறிப்பிட்ட அளவில் கொண்டுள்ளது. இது பிரதானமாக பப்பெய்ன் (Papain) மற்றும் கைமோபப்பெய்ன் (Chy mopapain) ஆகியவற்றை மூலக்கூறாகக் கொண்டுள்ளது. இவை கருப்பை தசைகளை தூண்டி அதிகளவான கருப்பை தசை சுருக்கங்களை ஏற்படுத்தக் கூடியன.



இது ஆய்வுகூட எலிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வியற்கைத் தகைமையானது பழுக்காத பப்பாளியை விலங்குகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக விருத்தியடைந்துள்ளது.

இது பப்பாளி கனிந்து பழமாக மாற்றமடையும் போது அதன் உள்ளடக்கம் குறைவடைந்து புறக்கணிக்கக்கூடிய அளவை அடைகிறது. இதன் காரணமாக கர்ப்பவதி ஒருவர் கனிந்த பப்பாளிப்பழத்தை உட்கொள்வதனால் குறித்த கருவுக்குப் பாதிப்பு ஏற்படாது.

இதேவேளையில் பப்பாளிப் பழமானது வருடம் முழுவதும் மலிவான விலையில் எளிதில் பெறக்கூடிய ஊட்டச்சத்து மிக்க ஒரு பழமாகும். 100 கிராம் பப்பாளிப் பழத்தில் 26 கிலோ கலோரி சக்தியும் 90 கிராம் நீர்ச்சத்தும் 5 கிராம் மாப்பொருளும் 3 கிராம் நார்ச்சத்தும் செறிந்து காணப்படுகிறது.

மேலும் அதிகளவில் விற்றமின் A, விற்றமின் C, போலிக்கமிலம், பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம் ஆகிய கனியுப்புக்களையும் கொண்டு காணப்படுகிறது.

குறிப்பிட்டளவு போலிக்கமிலம் இதில் காணப்படுவதன் காரணமாக கர்ப்பகாலத்தில் சிசுவின் மூளை மற்றும் முண்ணான் விருத்திக்கு உதவுகிறது. மேலும் பப்பாளிப் பழத்தில் அதிகளவு நார்ச்சத்து காணப்படுவதால் கர்ப்பகாலத்தில் ஏற்படக்கூடிய மலச்சிக்கலை தடுக்க உதவுகிறது

இதில் காணப்படும் பொட்டாசியம் உடலின் குருதியமுக்கத்தை சீரான அளவில் பேண உதவுகிறது. இதன் விற்றமின் A உள்ளடக்கமானது உடலின் நிர்ப்பீடனத் தொகுதிக்கு வலுவூட்டுகிறது. இதனால் தாய்க்கும் சிசுவுக்கும் நோய்களில் இருந்தான பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. இருந்த போதிலும் பப்பாளிப் பழத்திற்கு ஒவ்வாமையுடைய நபர்கள் இதை உட்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். எமது நாட்டில் நிறைக் குறைவுடைய மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடுடைய கர்ப்பவதிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்வாகக் காணப்படுகின்றது.

எனவே எப்போதும் இலகுவில், குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பப்பாளிப்பழம் எமது பிரதேசத்துக்கான ஓர் வரப் பிரசாதமே. ஆகவே பழைய மூடநம்பிக்கைகளை கருத்திற் கொண்டு கனிந்த ஓர் துண்டு பப்பாளிப்பழத்தைத் தவிர்ப்பது ஓர் புத்திசாலித்தனமான தெரிவாக அமையாது.

**வைத்தியர் சுஜிதா சுதர்சன்,**
**பயிலுநர், மருத்துவ போசனைப்பிரிவு.**

## தேங்காய்ப் பாலை வீண்விரயமாக்காதீர்கள்

பலர் தேங்காயின் முதற்பாலை பிளிந்து வெளியே ஊற்றி விட்டு இரண்டாம் மூன்றாம் பால்களை கறி சமைப்பதற்குப் பயன்படுத்தி வருவது தெரிய வந்திருக்கிறது.

முதலாம் இரண்டாம் மூன்றாம் தேங்காய்ப் பால்களுக்கு இடையிலான வேறுபாடுகள் அவற்றின் செறிவு வித்தியாசம் மாத்தி ரமே.

எனவே முதலாம் பாலை இரண்டாம் பால் ஆக்க நீங்கள் விரும்பினால் 1 கப் முதலாம் பாலினுள் 1 கப் நீரை ஊற்றிக் கலக்கிக் கொள்ளுங்கள்.

அது இரண்டாம் பால் ஆகிவிடும். மூன்றாம் பால் ஆக்க விரும்பினால் 1 கப் முதலாம் பாலினுள் 2 கப் நீரை ஊற்றி கலக்குங்கள். அது மூன்றாம் பால் ஆகிவிடும்.

தேங்காயின் முதற்பாலை வெளியே ஊற்றுவது முக்காற் பங்கு தேங்காயை விரயமாக்குவதற்கு ஒப்பானது.

**Dr.சி.சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2024



பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாயின் அருமை பெருமைகளை அறிந்த நீங்கள், தாய்நாட்டையும் நேசிப்பீர்கள். உடுத்தும் உடையையும் உள்ளிருக்கும் மனதையும் வெள்ளையாக வைத்துக் கொள்ளும் நீங்கள் யாருக்கும் தீங்கு நினைக்கமாட்டீர்கள். உங்கள் இராசிக்கு 11 ஆம் வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் அதிரடி மாற்றங்கள் உண்டாகும். முடங்கிக் கிடந்த நீங்கள் முழு மூச்சுடன் பாடுபட்டு முன்னேறுவீர்கள். அடிப்படை வசதிகள் பெருகும். எதிர்பாராத பண வரவு உண்டு. பிரபலங்களின் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். இழுபறியாக இருந்த வேலைகள் விரைந்து முடியும். புதிதாக நிலம், வீடு வாங்குவீர்கள்.

## கணவன் - மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள்!

மனக்குழப்பம் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். 30.4.2024 வரை உங்கள் இராசிக்கு 7ஆம் வீட்டில் குரு நிற்பதால் வர வேண்டிய பணம் கைக்கு வரும். கல்வியாளர்கள், அறிஞர்களின் நட்பு கிடைக்கும். பழைய சிக்கல்களை பேசி தீர்ப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வசதி வாய்ப்புகள் இருந்தும் வீட்டில் விளையாட ஒரு குழந்தை இல்லையே என தவித்த பெற்றோருக்கு அழகான வாரிசு உருவாகும். பிள்ளைகளால் சமூகத்தில் மதிக்கப்படுவீர்கள். தடைப்பட்ட கல்யாணப் பேச்சுவார்த்தை கூடி வரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை தந்து முடிப்பீர்கள். நிலுவையில் இருந்த வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வங்கிக் கடன் கிடைத்து புது வீட்டை கட்டி முடித்து குடிபுகுவீர்கள்.

எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சேமிக்கத் தொடங்குவீர்கள். உறவினர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மூத்த சகோதரிக்கு திருமணம் நிச்சயமாகும். புது வேலை கிடைக்கும். தாய்வழியில் அனுகூலம் உண்டாகும். அரசு காரியங்கள் விரைந்து முடியும். 1.5.2024 முதல் வருடம் முடியும் வரை குருபகவான் 8 ஆம் வீட்டில் மறைவதால் கணவன் - மனைவிக்குள் வீண் சந்தேகம் வரும். திடீர் செலவுகள் வந்து போகும். ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். குடும்பத்தில் வரும் சின்ன சின்ன பிரச்சினைகளை எல்லாம் பெரிதாக்க வேண்டாம். திடீர் பயணங்களும் அலைச்சல்களும் வந்து போகும். அரசாங்க அதிகாரிகளுடன் கருத்து மோதல்கள் வரக் கூடும்.

சித்தர் பீடங்களுக்கு மறவாமல் செல்லுங்கள். குலதெய்வ கோயிலை புதுப்பிப்பீர்கள். எதிர்பார்த்த அயல்நாட்டு பயணம் தாமதமாகி முடியும். வழக்கை நிதானமாக கையாளுங்கள். ரத்த அழுத்தம், சளித் தொந்தரவு, இனந்தெரியாத கவலைகள் வந்து போகும். மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்காதீர்கள். கர்ப்பிணிகள் கவனமாக இருப்பது நல்லது. முக்கிய பத்திரங்களில் கையெழுத்திடும் போது ஒருமுறைக்கு பலமுறை படித்துப் பார்த்து கையெழுத்திடுங்கள். அண்டை - அயலாருடன் அளவாகப் பழகுங்கள். நயமாகப் பேசுபவர்களை நம்பாதீர்கள்.

இந்த வருடம் தொடக்கம் முதல் வருடம் முடிய உங்கள் இராசிக்கு 6ஆம் வீட்டில் ராகு அமர்வதால் பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேர்வீர்கள். தாம்பத்யம் இனிக்கும். தடைப்பட்ட கல்யாணம் நல்ல விதத்தில் முடியும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். கேது உங்கள் இராசியை விட்டு விலகுவதால் நோய் விலகும். எதிலும் ஆர்வம் பிறக்கும். தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். குடும்பத்தில் மற்றவர்கள் மீதிருந்த சந்தேகங்கள் நீங்கும். புண்ணிய தலங்கள் செல்வீர்கள். கௌரவப் பதவிகள் கிடைக்கும்.




இந்த ஆண்டு முழுவதும் சனிபகவான் 5 ஆம் வீட்டில் தொடர்வதால் பிள்ளைகள் உங்களைப் புரிந்துக் கொள்ளாமல் பேசுவார்கள். உயர்கல்வி, உத்தியோகத்தின் பொருட்டு பிள்ளைகள் உங்களைப் பிரிவார்கள். தாய்மாமன் வகையில் செலவுகள் இருக்கும். சின்னச் சின்ன மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். குல தெய்வக் கோயிலுக்கு மறக்காமல் சென்று வாருங்கள். வியாபாரிகளே! உங்களுக்கு பின்னால் தொழில் தொடங்கியவர்கள் கூட முன்னேற்றமடைந்தார்களே. வட்டிக்கு வாங்கி கடையை விரிவுபடுத்தி நட்டப்பட்டீர்களே. இனி உங்களின் மாறுபட்ட அணுகுமுறையால் லாபமீட்டுவீர்கள். ஜனவரி, ஜூன், ஜூலை மாதங்களில் லாபம் அதிகரிக்கும். ஓகஸ்ட் மாதத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வேலையாட்களின் தொந்தரவு குறையும். வாடிக்கையாளர்களை கவர புது சலுகைகளை அறிவிப்பீர்கள். கெமிக்கல், கமிஷன், வாகன உதிரிப்பாகங்களால் லாபமடைவீர்கள். கூட்டுத்தொழிலில் பிரச்சினைகள் ஓயும். பங்குதாரர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

உத்தியோகத்தர்களே! ஓடி ஓடி வேலை பார்த்தும் கெட்ட பெயர்தானே கிடைத்தது. இனி அந்த அவலநிலை மாறும். மேலதிகாரிக்கு ஆலோசனை வழங்கும் அளவுக்கு நெருக்கமாவீர்கள். ஜூன், ஜூலை மாதங்களில் பதவி உயர்வு, சம்பள உயர்வு தடையில்லாமல் கிடைக்கும். சக ஊழியர்களுடன் இருந்த பனிப்போர் நீங்கும். கேட்ட இடத்துக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வருவீர்கள். முனகிக் கொண்டிருந்த உங்களை இந்தப் புத்தாண்டு முழக்கமிட வைப்பதுடன் கூடாபழக்கவழக்கங்களிலிருந்து உங்களை விடுவிப்பதாகவும் வாழ்வின் இரண்டாவது அத்தியாயத்தை தொடங்குவதாகவும் அமையும்.

**பரிகாரம்:** ஸ்ரீவீரஆஞ்சநேயரை சென்று வணங்குங்கள். துப்புரவுப் பணியாளருக்கு உதவுங்கள். ஏற்றம் உண்டாகும்.



ஆன்மிகம் முதல் அறிவியல் வரை அனைத்தையும் அறிந்து வைத்திருக்கும் நீங்கள், நியாயத்தின் பக்கம் நிற்பவர்கள். மென்மையும் விட்டுக்கொடுக்கும் மனமும் எல்லோருக்கும் உதவும் குணமும் கொண்ட நீங்கள், மற்றவர்களை வழி நடத்துவதில் வல்லவர்கள். உங்களுக்கு 10 ஆவது இராசியில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் பதவி கிடைக்கும். வேலை தேடிக்கொண்டிருந்தவர்களுக்கு எதிர்பார்த்தது போல வேலை அமையும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். குருபகவான் 30.4. 2024 வரை உங்கள் இராசிக்கு 6 ஆம் வீட்டில் மறைந்திருப்பதால் சில நேரங்களில் வீண் டென்ஷன், மன

## திடீர் யோகங்களும் பணவரவும் உண்டாகும்!

உளைச்சல், வேலைச்சுமை, வீண் பழி, செரிமானக் கோளாறு வந்து நீங்கும். மறைமுக எதிரிகளை இனங்கண்டறிவீர்கள்.

எதிரிகளில் சிலர் நண்பர்களாவார்கள். உள்மனதில் ஒருவித போராட்டம் எழும்பும். திட்டமிட்ட காரியங்களை இரண்டு மூன்று முறை அலைந்து முடிக்க வேண்டி வரும். அதிக வட்டிக்கு வாங்கிய கடனில் ஒருபகுதியை கொடுத்து முடிப்பீர்கள். குலதெய்வ கோயிலை புதுப்பிப்பீர்கள். தங்க ஆபரணங்கள், வீட்டுப் பத்திரங்களை கவனமாக கையாளுங்கள். யாருக்கும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். உறவினர்கள், நண்பர்களுடன் அதிக உரிமையுடன் பேசி பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள். குருபகவான் 1.5.2024 முதல் 7 ஆம் வீட்டில் அமர்வதால் திடீர் திருப்பங்கள் உண்டாகும். சோர்ந்து கிடந்த நீங்கள் உற்சாகமாவீர்கள்.

எதிலும் ஆர்வம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முழுமையடையும். வீட்டில் தாமதமான சுப நிகழ்ச்சிகள் இனி கோலாகலமாக நடக்கும். தம்பதிக்குள் இருந்த சந்தேகம், ஈகோ பிரச்சினைகள் நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. தள்ளிப்போன வெளிநாட்டுப் பயணம் சாதகமாக அமையும். மகளுக்கு இருந்த கூடாப்பழக்கம் விலகும். மகனுக்கு நீங்கள் எதிர்பார்த்ததைப் போல நல்ல குடும்பத்திலிருந்து பெண் அமையும். வீட்டை கட்டி முடிக்க எதிர்பார்த்த வங்கிக் கடன் கிடைக்கும். தாயாருக்கு இருந்த நெஞ்சு வலி நீங்கும். செலவுகளை குறைத்து இனி சேமிக்கத் தொடங்குவீர்கள். பூர்வீகச் சொத்திலிருந்த பிரச்சினை தீரும். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்த உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். நினைத்திருந்த டிசைனில் ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

இந்த வருடம் முடிய ராகுபகவான் 5 ஆம் வீட்டிலும் கேது 11 ஆம் வீட்டிலும் தொடர்வார்கள். ராகுவால் கனவுத் தொல்லை, பிள்ளைகள் விடயத்தில் அலைச்சல் வந்து செல்லும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். வயிற்று வலி, தோல் நோய் வரக்கூடும். அசைவ, கார உணவுகளை தவிர்த்துவிடுங்கள். தாய்மாமன் வகையில் மனத்தாங்கல் வரும். கேதுவால் திடீர் யோகங்களும் பணவரவும் உண்டாகும். மூத்த சகோதரர்கள் உதவுவார்கள். கௌரவப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை உணர்ந்து தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். இந்தாண்டு முழுவதும் சனிபகவான் உங்கள் சுகஸ்தானமான 4 ஆம் வீட்டிலேயே தொடர்வதால் இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது.




வாகனம் அடிக்கடி பழுதாகும். வீட்டை விரிவுபடுத்தி கட்டுவீர்கள். தாயாருக்கு சிறுசிறு விபத்து கள் வந்து நீங்கும். தாய்வழி சொத்தை விற்று புது சொத்து வாங்குவீர்கள். யாருக் கும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். வேற்று மதத்தினர் உதவுவார்கள். இல வசமாக அறிமுகமாகும் கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி விடாதீர்கள்.

வியாபாரிகளே! சந்தை நிலவரம் அறிந்து புது முதலீடு செய்வது நல்லது. முன் பின் அனுபவம் இல்லாத துறையில் மற்றவர்களை நம்பி கைப்பொருளை இழக்க வேண்டாம். கொடுக்கல் - வாங்கலில் சுமுகமான நிலை காணப்படும். அனுபவம் மிக்க வேலையாட்களை பணியில் சேர்ப்பீர்கள். ரியல் எஸ்டேட், பதிப்பகம், இரும்பு, துரித உணவு வகைகளால் லாபம் பெறுவீர்கள். பெப்ரவரி, மார்ச் மாதங்களில் தேங்கிக் கிடந்த சரக்குகள் விற்றுத் தீரும். புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். ஏப்ரல் மாதத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களில் புது ஏஜென்சி எடுப்பீர்கள். புரிந்து கொள்ளாமல் அவ்வப்போது பிரச்சினை செய்த கூட்டுத்தொழில் பங்குதாரர்கள் இனி பணிந்து போவார்கள். பழைய பங்குதாரர்களும் தேடி வருவார்கள்.

உத்தியோகத்தர்களே! எதற்கெடுத்தாலும் உங்களை குறை சொல்லுவதற்கென்றே இருந்த கூட்டம் காணாமல் போகும். இனி உங்களின் மதிப்பு மரியாதை கூடும். பெப்ரவரி, மார்ச் மாதங்களில் புது வாய்ப்புகள் வரும். சம்பள பாக்கியும் கைக்கு வரும். ஏப்ரல் மாதத்தில் அயல்நாட்டு நிறுவனங்கள் அழைக்கும். இந்தாண்டு முழுவதும் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருக்கும். செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களில் உயரதிகாரிகளின் ராஜதந்திரத்தை உடைத்தெறிவீர்கள். உங்கள் மீது தொடரப்பட்ட பொய் வழக்கும் தள்ளுபடியாகும். இந்த புத்தாண்டு திட்டமிட்டு செயற்பட வைப்பதுடன், சிக்கனத்தையும் கடைப்பிடிக்க வைப்பதாக அமையும்.

**பரிகாரம்:** விநாயகரை சென்று வணங்குங்கள். மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் சாப்பிட ஏதேனும் வாங்கிக் கொடுங்கள். மகிழ்ச்சி தொடங்கும்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரியா மீது வடகொரியா குண்டுகளை வீசி திடீர் தாக்குதல்

## கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம்

**(சியோல்)**
**தென்கொரியா மீது வடகொரியா திடீரென 200இற்கும் மேற்பட்ட பீரங்கிக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்திய சம்பவம் உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.**



தென்கொரியாவிற்கு சொந்தமான யோன் பியோங் தீவுக்கு அருகிலேயே 200 இற்கும் மேற்பட்ட ஷெல் குண்டுகளை வீசி வட கொரியா தாக்குதல் நடத்தியுள்ளது.

அண்மையில் அமெரிக்கா - தென் கொரியா கூட்டு போர்ப்பயிற்சி மேற்கொண்ட நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடகொரியா இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. வட கொரியாவின் தாக்குதலில் மக்கள் யாருக்கும் பாதிப்பு இல்லை என்று தென்கொரியா தலைமைத் தளபதி தகவல் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் இந்த நடவடிக்கை கொரிய தீபகற்பத்தில் அமைதியை அச்சுறுத்தும் மற்றும் பதற்றத்தை அதிகரிக்கும், ஆத்திரமூட்டும் செயல் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரிய இராணுவத்தின் திடீர் தாக்குதலை அடுத்து யோன் பியோங் தீவு பகுதிகளில் வசிக்கும் மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல தென் கொரிய இராணுவம் உத்தரவிட்டுள்ளது. (நி-5)

# ஜோ பைடன் மீது அதிருப்தி பதவி விலகிய மூத்த அதிகாரி

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் காசா மோதலை கையாளும் முறைக்கு அதிருப்தி வெளியிட்டு அமெரிக்க கல்வித் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் பதவி விலகியுள்ளார்.

இந்தப் போருக்கு எதிராக அமெரிக்க நிர்வாகத்தில் அதிகரித்து வரும் அதிருப்தியின் தொடர்ச்சியாகவே இந்தப் பதவி விலகல் அமைந்துள்ளது.

இந்த விவகாரத்தால் எதிர் வரும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தோல்வியை சந்திக்கக் கூடும் என்று பைடனுக்கு அவரது பிரசாரக் குழுவைச்



சேர்ந்தவர்கள் அனுப்பிய கடிதம் ஒன்றில் எச்சரித்துள்ளனர்.

கல்வித் திணைக்களத்தின் திட்டமிடல், மதிப்பீடு மற்றும் கொள்கை மேம்பாட்டு அதிகாரியான தாரிக் ஹபாஷ் கல்விச் செயலாளர் மகுவேல் கார்டோனாவுக்கு அனுப்பி இருக்கும் கடிதத்தில், "அப்பாவி பாலஸ்தீனர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொடுமைகள் தொடர்பில் நிர்வாகம் கண்மூடி இருப்பதைப் பார்த்து என்னால் தொடர்ந்தும் அமைதியாக இருக்க முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இஸ்ரேலுக்கு கண்மூடித்தனமாக ஆதரவு வழங்குவதாகக் கூறிய முன்னாள் இராஜாங்கத் திணைக்கள அதிகாரி ஜோஷ் போல் கடந்த ஒக்டோபரில் பைடன் நிர்வாகத்தில் இருந்து இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இந்தோனேசியாவில் தொடரூந்துகள் மோதி விபத்து- மூவர் பலி



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் முக்கியமான தீவுகளில் ஒன்றான ஜாவாவில் நேற்று முன்தினம் இரண்டு தொடரூந்துகள் மோதியதில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தோனேசிய தலைநகரின் கிழக்கு மாகாணமான சுரபயாவில் இருந்து பாண்டுங் நோக்கி சென்ற தொடரூந்து சிகா லெங்காவில் இருந்து படாலராங் நோக்கி சென்ற பயணிகள் தொடரூந்தின் மீது பயங்கரமாக மோதியது.

இந்த தொடரூந்து விபத்து மேற்கு ஜாவாவின் பாண்டுங் நகரில் உள்ள சிகாலெங்கா தொடரூந்து நிலையத்தில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் பல பெட்டிகள் தடம்புரண்டதுடன் 3 பேர் உயிரிழந்த நிலையில், 28 பேர் காயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

# ஜப்பான் நிலநடுக்கத்தினால் தொடரும் மீட்பு நடவடிக்கை



(டோக்கியோ)

நிலநடுக்கத்தில் காணாமல் போன 242 பேரைக் கண்டுபிடிக்க தொடர்ந்தும் மீட்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மீட்பு பணியாளர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி 4,600 பேரை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாக கியோடோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் நோட்டோ தீபகற்பத்தில் 7.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 92 ஆக உயர்ந்துள்ளது.

இடிந்து விழுந்த வீடுகளுக்கு அடியில் பலர் சிக்கியிருக்கலாம் என கருதப்படும் அதேநேரம் ஆயிரக் கணக்

கான குடியிருப்பாளர்களுக்கு இன்னும் மின்சாரம் மற்றும் தண்ணீர் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

# கடத்தப்பட்ட கப்பலை மீட்ட இந்திய கடற்படையினர்

(மெகாடிசு)

ஆபிரிக்க நாடான சோமாலியா கடற்பகுதியில் 15 இந்தியர்களுடன் கடத்தப்பட்ட வணிகக் கப்பல் இந்திய கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

கடத்தல் சம்பவம் தொடர்பில் தகவலறிந்தவுடனேயே இந்திய கடற்படையினர் விரைந்து செயற்பட்டனர்.

அத்தோடு, 15 இந்தியர்கள் உட்பட 21 பணியாளர்களும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

இந்நிலையில், இந்திய கடற்படையின் MARCOS கமாண்டோக்கள் கப்பலில் சோதனை நடத்தியதுடன் கப்பலில் கடற்கொள்ளையர்கள் யாரும் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்ட கப்பலை மீட்க INS Chennai கடற்படை கப்பல் அனுப்பப்பட்டது. இந்திய கடற்படையின் கடுமையான எச்சரிக்கைக்கு பயந்து கடத்தல்காரர்கள் கப்பலை விட்டு தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.

~ சிம்மன்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அன்று எம்மை எதிர்த்து அழித்தனர் இன்று உடன்பட்டு அழிக்கின்றனர்

அரசியல் இராஜதந்திரம் என்பதைப் புரிந்து கொள்வதென்பது சாதாரணமான விடயமன்று.

அதைப் புரிந்து கொள்வதற்கு எப்போதெல்லாம் மானிடப் பிறப்பு எடுக்க முடியுமோ அப்போதெல்லாம் பிறப்பெடுத்து அரசியல் இராஜதந்திரத்தை கற்றால் மட்டுமே அதனை ஓரளவேனும் புரிந்து கொள்ள முடியும்.

உதாரணத்துக்கு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

தேவாலயத்தில் வழிபாட்டுக்குச் சென்ற அப்பாவிகள் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்.

கொச்சிக்கடை தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் தன் தாயைப் பறிகொடுத்த ஒரு பச்சிளம் பாலகி இறந்த தன் தாயின் உடலுக்கு அருகில் நின்று அழுத சம்பவம் இந்த உலகையே உலுக்கியது.

ஆனால் பின்னாளில் அந்த ஈனச் செயலைச் செய்தவர்கள் யார் என்பதையும் எந்த நோக்கத்துக்காக அவர்கள் அந்தக் கொடும் செயலைச் செய்தார்கள் என்பதையும் அறியும்போதுதான் அரசியல் என்பதன் ஆழத்தை எட்டிப்பார்க்க முடிந்தது.

ஆம், அரசியல் எத்துணை பயங்கரமானது என்பதை ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளது.

ஆக, அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக எதுவும் செய்யவல்லவர்கள் உள்ளனர் என்பதற்கு நாம் சுட்டிக்காட்டிய உதாரணம் பொருத்தமானது.

இது ஒருபுறமிருக்க, முன்பெல்லாம் எங்களை எதிர்த்து எங்களை அழித்த பேரினவாதிகள் இப்போது ஒரு புதிய யுக்தியை – உபாயத்தைப் பின்பற்றத் தலைப்பட்டுள்ளனர்.

அதாவது, நாங்கள் சொல்வதற்கெல்லாம் தலையசைப்பது, இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதற்கு உடன்படுவது என்றவாறு எங்களோடு உடன்பட்டு, எங்களை அழிக்கின்ற வேலைத்திட்டமே புதிய இராஜதந்திரமாகும்.

ஆம், இப்போது ஓர் இனத்தை எதிர்ப்பது உலக அரங்கில் வெறுப்புக்குரிய விடயமாயிற்று. எனவே தமிழினத்தை எதிர்ப்பதினூடாக சர்வதேச அரங்கில் இலங்கை நன்மதிப்பைப் பெற முடியாது.

ஆகையால் தமிழ் இனத்தோடு சேர்ந்து போகின்ற நடைமுறையைப் பின்பற்றினால் அதை தமிழ் மக்களும் நம்புவர். சர்வதேசமும் அமைதி கொள்ளும்.

இந்த அடிப்படையில்தான் வடக்கின் அபிவிருத்தி, மீள்குடியமர்வு, இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்றவாறு பட்டோலை வாசிக்கப்படுகிறது.

இவ்வாறு ஆட்சித் தலைமை பட்டோலை வாசிக்கும்போது அட, எங்கள் பிரச்சினையை ஆட்சித் தலைமை புரிந்து கொண்டுள்ளதென்ற நம்பிக்கையோடு நாம் இருப்போம்.

ஆனால் மறுபுறத்தில் எங்களை அழிப்பதற்கான மறைமுக ஏற்பாடுகள் தாராளமாக நடக்கும். இதுதான் இப்போதைய அரசியல் இராஜதந்திரம்.

### பருத்தித்துறை பொலிஸ் பிரிவில்
## போதைக்கு அடிமையான யுவதி விளக்கமறியலில்

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி ஒன்றில் போதைக்கு அடிமையான யுவதியை எதிர்வரும் பத்தாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவன் கிருசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.

மேற்படி யுவதி பேத்தியாரின் அரவணைப்பில் இருந்ததாகவும் தொடர்ந்து போதைப்பொருள்பாவித்துவிட்டு நள்ளிரவு வீட்டுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று கடந்த வெள்ளிக்கிழமை(05) நள்ளிரவு கூரையைப் பிரித்து வீட்டுக்குள் யுவதி இறங்கியதைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டு காரணமாக குறித்த யுவதி பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவா பரிசோதனை மேற்கொண்டு ஐஸ் போதை பொருள் பாவிக்கப்பட்டதாக அறிக்கையிட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து பொலிஸார் யுவதியை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

(ம-7,60)

### நிமோனியா காய்ச்சலே
## வயோதிப மாதுவின் உயிரிழப்புக்கு காரணம்

(கரணவாய்)

மூச்சு விட சிரமப்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த வயோதிப மாதுவின் மரணத்திற்கு நிமோனியா காய்ச்சல் காரணம் என பிரேத பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

வல்லிபுரம், புலோலி தெற்கைச் சேர்ந்த சரஸ்வதி வல்லிபுரம் (வயது-75) என்ற வயோதிப மாது மூச்சு விட சிரமப்பட்ட நிலையில் கடந்த வியாழக்கிழமை (04) பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டார்.

மறுநாள் வெள்ளிக்கிழமை (05) அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இம்மரணம் தொடர்பில் நேற்று சனிக்கிழமை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார். உடற்கூற்று பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி கே. வாசுதேவா மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனையில் மரணத்துக்கான காரணம் நிமோனியா காய்ச்சல் என அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## நீதிமன்றத்துக்குள் ஒளிப்பதிவு இளைஞர் ஒருவர் கைது

பருத்தித்துறை நீதிமன்றத்துக்குள் ஒளிப்பதிவு மேற்கொண்ட இளைஞர் ஒருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று சனிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் உரிமை கோரப்படாத பொருட்கள் ஏலம் விடப்பட்டன.

அச்சமயம் நீதிமன்றத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை தொலைபேசியில் ஒளிப்பதிவு செய்த இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர் இன்று ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,60)

# பரமபிதா காட்டிய பாதை

## பிரிவுகளையும் பிளவுகளையும் பின்தள்ளும் விண்மீன்களாவோம்

ஆண்டவரின் திருக்காட்சித் திருவிழா இன்று. இயேசு பாலன் பிறந்துள்ளதைக் காண ஞானிகள் கீழ்த்திசையிலிருந்து வருகை தந்து பெத்லகேம் மாட்டுத் தொழுவத்தில் அவரைக் கண்டு மகிழ்ந்து பாலகனைத் தரிசித்த தினத்தைக் கத்தோலிக்கத் திருச்சபை ஆண்டவரின் திருக்காட்சித் திருவிழா என கொண்டாடுகிறது. மூன்று இராசாக்கள், மூன்று அரசர்கள், மூன்று ஞானிகள் (கிழக்கிலிருந்து ஞானிகள்) என்றும் பலவாறாக அழைக்கப்படும். இவ்விழாவின் நாயகர்கள் எந்தத் தடை வந்தாலும் எடுத்த தீர்மானத்தில் உறுதியாய் இருப்பதற்கு நமக்குச் சிறந்த வழிகாட்டிகள். கிறிஸ்து பிறப்பு தினத்தில் வைக்கப்படும் பாலன் குடில்கள் மூன்று ஞானிகள் திருவிழா வரை தொடர்ந்து வைக்கப்பட்டு அதன் பின்னரே அகற்றப்படும்.

இந்த ஞானிகளின் வருகையை ஒட்டி சில முன்னறிவிப்புக்கள் உள்ளன என்று வரலாறு கூறுகின்றது. விண்மீன்: கிறிஸ்து பிறப்பதற்கு முன் 11ஆம் ஆண்டில் ஹேலிஸ் நட்சத்திரம் தோன்றியது. கி.மு7ஆம் ஆண்டில் மூன்று கோள்கள்: சாட்டர்ன், ஜூபிட்டர், மார்ஸ் ஒன்றாகக் கூடிவந்து வானத்தில் விந்தை நடத்தின. கி.மு 5 இலிருந்து 2ஆம் ஆண்டுக்கு இடையில் மெசோரி, சூரியன், டாக்ஸ்டார் என்பவை பிரகாசமாகத் தோன்றின. இவ்வெளிப்பாட்டின் வழியாக ஒரு புதிய அரசர் தோன்றுவார் என்று மக்கள் நம்பினர். இயேசு பிறப்பதற்கு முன்னர் இஸ்ரயேல் நாட்டில் ஓர் அரசர் தோன்றுவார். அவர் மெசியாவாக இருப்பார். அவர் மக்களை மீட்டு விடுதலை அளிப்பார் என்று மக்கள் நம்பினர். "யூத நாட்டு பெத்லகேமே யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை. ஏனெனில் என் மகளாகிய இஸ்ராயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்து தோன்றுவார்" எனக் கூறப்பட்ட பைபிளின் வாக்கில் நம்பிக்கை கொண்டு அவரது வருகைக்காக ஆவலோடு காத்திருந்தனர். அரசர் பிறந்துவிட்டார் என்று வானசாஸ்திரிகள் விண்மீன் கண்டு தங்கள் ஞானத்தைப் பயன்படுத்தி பாலன் யேசுவைக் காணப் பயணத்தை மேற்கொண்டனர்.

விண்மீன் இரவில் மட்டுமே தெரியும். எனவே இந்த ஞானிகள் இரவில் தங்கள் பயணத்தை அதிகம் செய்திருக்க வேண்டும். பயண வசதிகள் குறைவாக [illegible] பயணங் [illegible] ஒரு சிறு விண்மீனைப் பல்லாயிரம் விண்மீன்களுக்கு நடுவே மீண்டும் மீண்டும் அடையாளம் கண்டு அந்த விண்மீனைத் தொடர்வது அவ்வளவு எளிதல்ல. பல இரவுகள் மேகங்களும் பனிமூட்டமும் அந்த விண்மீனை மறைத்திருக்கும். அந்த நேரங்களில் மேகமும் பனியும் விலகும் வரை காத்திருந்து மீண்டும் விண்மீனைப் பார்த்து எத்தனை எத்தனை இரவுகள் அவர்கள் நடந்திருக்க வேண்டும். இத்தனை இடர்பாடுகள் மத்தியிலும் ஒரே குறிக்கோளுடன் இரவின் துணையில் பல ஆயிரம் மைல்கள் கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் பயணம் செய்து இயேசுவை கண்டு வணங்கியிருக்க வேண்டும். இந்த ஞானிகளின் மனஉறுதி நமக்கெல்லாம் நல்லதொரு பாடம். இவர்களை கட்டாயம் நாம் பின்பற்ற வேண்டும். இந்த ஞானிகள் எத்தனை இரவுகள் விண்மீனைத் தொலைத்து விட்டு வேதனைபட்டிருப்பார்கள்? இருந்தாலும் இறுதிவரை மனம் தளராமல் பயணத்தைத் தொடர்ந்தார்கள். இலக்கை அடைந்தார்கள். கடவுளைக் கண்டார்கள்.

இந்த மூன்று ஞானிகள் திருவிழா இறைவன் தன்னை உலகின் அனைத்து மக்களுக்கும் வெளிப்படுத்திய திருக்காட்சி திருவிழா எனக் கொண்டாடப்படுகிறது. இறைவன் தங்களுக்கு மட்டுமே சொந்தம் என்று எண்ணி வந்த யூத குலத்தவருக்கு இந்தத் திருவிழாவும் இதில் பொதிந்திருக்கும் உண்மையும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். வானதூதர்கள் வழியாக, எரியும் புதர் வழியாக, மெல்லிய தென்றல் வழியாகத் தங்களுக்கு மட்டுமே தோன்றிய இறைவன், இன்று பிற இனத்தவருக்கும் தோன்றினார் என்பது அவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இறைவன் அனைத்து மக்களுக்கும் பொதுவானவர். யாருக்கும் தனிப்பட்ட வகையில் அவர் சொத்தாக முடியாது. இந்த உலகமே அவரது சொத்து. இப்படியிருக்க இறைவனைப் பங்கு போட்டு, பிரித்து, அதனால் மக்களையும் பிரிக்கும் பல எண்ணங்கள் தவறானவை என்பதைச் சுட்டிக்காட்டும் திருவிழா இந்தத் திருக்காட்சித் திருவிழா. கடவுளின் பெயரால் பிரிவுகளையும் பிளவுகளையும் உருவாக்கி, அவர் பெயரால் வன்முறைகளையும் வளர்க்கும் பல குழுக்களுக்கு இந்தத் திருவிழா நல்லதொரு எடுத்துக்காட்டு.

ம.பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை முதல் 10 ஆம் திகதிவரை
# விசேட டெங்கு கட்டுப்பாட்டு தினங்களாக பிரகடனம்-வைத்திய கலாநிதி கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவும் தீவிர டெங்கு பரம்பல் நிலைமையைக் கட்டுப் படுத்தும் நோக்குடன் சுகாதார அமைச்சினால் விசேட டெங்கு கட்டுப்பாட்டு தினங்களாக நாளை 8 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப் பட்டதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி.ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இக்காலப் பகுதியில் வீடுக ளையும் வேலைத்தளங்க ளையும் பொது இடங்களையும் குழுக்களாகப் பரிசோதனை யிட்டு நுளம்பு பெருகும் இடங் களைக் கண்காணித்து அழிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி யில் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சிமன்ற உத்தி யோகத்தர்கள், முப்படையினர், பொலிஸார் மற்றும் ஏனைய தன்னார்வ தொண்டர்கள் இணைந்து ஈடுபடவுள்ளனர்.

முதல் நாளான 8 ஆம் திகதி பாடசாலைகள், வணக்கஸ்தல ங்கள் மற்றும் மயானங்கள் பார் வையிடப்படவுள்ளன. இரண் டாம் நாளான 9 ஆம் திகதி அரச தனியார் நிறுவனங்கள், வர்த் தக நிலையங்கள், தொழிற் சாலைகள் மற்றும் கட்டடநிர் மாணத்தளங்கள் பார்வையிடப் படவுள்ளன. மூன்றாம் நாளான 10 ஆம் திகதி பொது மக்களின் வீடுகள் பார்வையிடப்படவு ள்ளன.

எனவே பொதுமக்கள் தமது வீட்டு வளாகங்கள் மற்றும் சுற் றாடலை துப்புரவு செய்து நுளம்பு பெருகக்கூடிய இடங்களை அழி க்குமாறு கேட்டுக்கொள்ளப்ப டுகிறீர்கள். வேலைத் தளங்க ளில் சிரமதான அடிப்படையில் நுளம்பு பெருகும் இடங்கள் சுத்திகரிக்கப்படல் வேண்டும்.

குழுப் பரிசோதனையின் போது டெங்கு பரம்பலுக்கு ஏது வான நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் உள்ள வீட்டு/நிறுவன உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் அனைவரும் தங்களது வீடுகள் வேலைத்தளங்கள் மற்றும் பொது இடங்களை துப்புரவாக வைத்திருந்து ஒத்துழைப்பு வழ ங்குமாறு அவர் கேட்டுக்கொண் டுள்ளார். (நி-5)

# வன்முறைக் கும்பலினால் முச்சக்கரவண்டிகள் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இரண்டு முச்சக்கர வண்டிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வன் முறை கும்பலினால் தீக்கிரை யாக்கப்பட்டுள்ளன.

இரண்டு வன்முறை கும்பல் களுக்கு இடையில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் முரண்பாடு காரணமாக முச் சக்கர வண்டிகள் தீக்கிரை யாக்கப்பட்டதாக பொலிஸ் விசா ரணைகளில் தெரிய வந்துள் ளது.

இதேவேளை கடந்த வியா ழக்கிழமை இரவு கோண்டா வில் ஐயப்பன் ஆலயத்திற்கு அருகில் இளைஞன் ஒருவர் மீது வன்முறை கும்பல் வாள் தாக்குதலை மேற்கொண்டு , வீதியில் நின்ற முச்சக்கர வண் டியையும் அடித்து உடைத்து சேதமாக்கி விட்டு தப்பி சென்று இருந்தமை குறிப்பிடத்தக் கது. (நி-5-33)

## சிவத்தமிழ் அன்னையின்
# 99 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா

(யாழ்ப்பாணம்)


அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை, கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டியின் 99 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா இன்று காலை 8.30 மணிக்கு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவு ள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விரு ந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், சிற ப்பு விருந்தினர்களாக வலி .வட க்கு பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ மற்றும் யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீட வைத்திய நிபுணர் பா.பாலகோபி, கௌரவ விருந் தினர்களாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் மற்றும் உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ப.கணேஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)




தென்மராட்சி மீசாலை வடக்கு "சுடர் ஒளி" பாலர் பாடசாலையின் கலைவிழாவும் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாலர் பாட சாலை மண்டபத்தில் இடம்பெற்றன. (படம்:- சிவசாந்தன்)

# சான்றோர் பெருமக்கள் ஐவருக்கு இன்று சிவத்தமிழ் விருது
## அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 99 ஆவது பிறந்த நாளில் கௌரவம்



பேராசிரியர்
சி.சிவலிங்கராஜா



வைத்திய கலாநிதி
சி.அருளானந்தம்



இளைப்பாறிய விரிவுரையாளர்
திருமதி.நாச்சியார் செல்வநாயகம்



நாதஸ்வர வித்துவான்
இ.கேதீஸ்வரன்



இளைப்பாறிய அதிபர்
மு.அருணாசலம்

இன்று சிவத்தமிழ் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களின் 99 ஆவது பிறந்த நாள். அன்னையின் பிறந்த நாளில் சான்றாண்மை மிக்கவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் பிறந்த நாள் அறக்கொடை வழங்கு கின்ற வைபவமும் முதன்மைக் குரியவையாக விளங்குகின் றன.

அந்த வகையில் 2024 ஆம்ஆண்டில் சிவத்தமிழ் விருது நம் ஈழத்து மண்ணின் புகழ் பூத்த சான்றோர் பெருமக்கள் ஐவருக்கு வழங்கிக் கௌரவிக் கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழ கத்தின் தமிழ்த்துறைத் தலை வராக இருந்து ஓய்வுபெற்ற பேரா சிரியர் சி.சிவலிங்கராஜா, வைத் திய கலாநிதி சி.அருளானந்தம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.நாச்சியார் செல்வநாய கம், நாதஸ்வர வித்துவான் இரத்தினவேல் கேதீஸ்வரன், ஓய்வுநிலை அதிபர் முருகேசு அருணாசலம் ஆகியோருக்கு சிவத்தமிழ் விருது வழங்கப்பட வுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அன்னபூரணி மண்டபத்தில் துர்க்காதேவி தேவ ஸ்தான தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன் அவர்க ளின் தலைமையில் இடம் பெறும்.

அன்னை தங்கம்மா அப் பாக் குட்டி அவர்களின் 99 ஆவது பிறந்த நாள் அறக் கொடை விழாவில் வைத்து மேற் படி விருதுகள் வழங்கி வைக் கப்படவுள்ளன.

இதேவேளை அன்னையின் பிறந்த நாள் அறக்கொடை தெல் லிப்பழை புற்றுநோய் சிகிச் சைப்பிரிவுக்கும் சிவத்தமிழ்ச் செல்வி கல்வி நிதியம், உடுவில் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கும் வழங் கப்படவுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலையில்...

தமிழ் மக்களின் பாரம்பரியத்தையும் வீரத்தையும் பறைசாற்றும் ஜல்லிக்கட்டு இலங்கை வரலாற்றில் முதல் முறையாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் முயற்சியில் நேற்று திருகோணமலை சம்பூரில் நடைபெற்றது.

தமிழருடைய பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழ்நாட்டை தாண்டி வேறு ஒரு நாட்டில் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும்.

தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்கத்தின் வழிகாட்டலில் ஜல்லிக்கட்டு இடம்பெற்றது.

இதன்போது காளைகள் சீறிப் பாய்ந்ததுடன், காளைகளுக்கும் காளைகளை அடக்கிய வீரர்களுக்கும் பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன. (ம-7)

## வடக்கில்...

வியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதன்படி, வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மழைவீழ்ச்சி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுத் தெரிவித்துள்ளது.

மேலும் ஏனைய பகுதிகளில் பிற்பகல் 1.00 மணிக்குப் பிறகு மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும் எனத் தெரிவித்துள்ளது. (ம-7)

## இலக்கை...

அடைந்துள்ளது.

கடந்த வருடம், செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஸ்ரீ ஹரிகோட்டா விண்வெளி நிலையத்தில் இருந்து குறித்த விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது.

இஸ்ரோவின் ஆதித்யா எல் - 1 என்ற விண்கலம், நீள்வட்டப்பாதையில் பூமியைச் சுற்றி படிப்படியாக தமது சுற்றுப்பாதையை அதிகரித்து சூரியனை நோக்கி நீண்ட பயணத்தை மேற்கொண்டு, பூமியிலிருந்து 15 லட்சம் கிலோமீற்றர் தொலைவில் உள்ள முதல் லாக்ராஞ்சியன் புள்ளியைச் சுற்றி நிலவும் பூச்சிய ஈர்ப்பு விசையுள்ள சுற்றுப்பாதையில் நுழைந்துள்ளது.

ஆதித்யா எல் - 1 என்ற விண்கலம், தொடர்ச்சியாக 5 வருடங்கள் குறித்த லாக்ராஞ்சியன் புள்ளியில் இருந்து சூரியனை ஆராய்ச்சி செய்யும் என குறிப்பிடப்படுகிறது.

இஸ்ரோவின் குறித்த வெற்றியின் மூலம் சூரியன் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் 4ஆவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. (ம-7)

## வடக்கு மாகாண...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு வர்த்தர்களின் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகள் எதிர்வரும் 02 வாரங்களில் வடக்கிற்கு விஜயம் செய்து இவ்விடயம் தொடர்பில் ஆராயவுள்ளதாகவும், வடமாகாண வர்த்தக சமூகத்தினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நிறுவனமொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வடமாகாணத்தைச் சேர்ந்த தொழில் துறையினர், மீனவ சமூகம் மற்றும் விவசாயிகள் உள்ளடங்கிய சுமார் 300 பேர் கொண்ட குழு இந்நிகழ்வில் கலந்துகொண்டதுடன், தமது தொழில் துறை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் புதிய முன்மொழிவுகளை ஜனாதிபதியிடம் முன்வைத்தனர். (ம-7,33)

## நேரில் அழைத்து...

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற 22 ஆவது 'மூத்தோருக்கான ஆசிய தடகள சம்பியன்ஷிப்' போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் வென்ற முல்லைத்தீவைச் சேர்ந்த அகிலத்திருநாயகியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேரில் அழைத்து பாராட்டி கௌரவித்து மதிப்பளித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இச்சந்திப்பின்போது, வயது என்பது வெறும் இலக்கம் மட்டுமே என்பதை நிரூபித்து அகிலத்தை வென்ற அகிலத்திரு நாயகிக்கு ஜனாதிபதி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களுக்கு ஆதரவையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

இவருக்குத் தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறும் ஆளுநருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற சிரேஷ்ட பிரஜைகளுக்கான தடகளப் போட்டியில் (National Masters & Seniors Athletics) இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றிருந்த திருமதி அகிலத்திருநாயகி (வயது-71) இரண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## இலங்கை...

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை யாழ்.மாவட்ட சர்வமதத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சிவபூமி. இலங்கையின் ஆதிசமயம் சைவ சமயம். சைவர்களோடு சேர்ந்து பௌத்தர்களும் விஷ்ணுவை, சிவனை, உமையை, கண்ணகியை கல்வி, செல்வம், வெற்றிக்கான அம்மன்களை விநாயகரை முருகனை வழிபடுகிறார்கள்.

இந்துக்கள் இந்த நாட்டில் உரிமையோடு வாழ்வதைப் புத்த சமயத்தவரும் உறுதி செய்கிறார்கள்.

இலங்கையில் இந்து மதம் பாதுகாக்கப்படுவதையும் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

அத்தோடு இங்கு சிங்களவர்கள் வந்து கோவில்களில் வழிபாடுகளை மேற்கொள்வதை யாரும்பிரச்சினையாக்கிக் கொள்ளக்கூடாதென நான் கருதுகிறேன்.

அத்துடன், இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு மதத்துக்கு அநீதி இழைக்கப்படுமாயின், அது தொடர்பில் எனக்கு தெரியப்படுத்துங்கள். அதற்கான உரிய நடவடிக்கைகளை நான் முன்னெடுப்பேன் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## தலை...

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையே விரைவில் தரைவழிப் பாதை அமைக்கப்படும்.

இலங்கையும் அதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையே தரைப் பாதை அமைக்க இந்தியா ஆர்வம் காட்டியிருந்த நிலையில் இலங்கை தற்போது அதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

விரைவில் அது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றார். (ம-7)

## நல்லூரை...

அனைத்து மதத் தலைவர்களும் நல்லூர் ஆலய பொறுப்பாளர்கள் விரும்பினால் நல்லூர் ஆலயத்தை விட பெரிய ஆலயத்தை அமைக்க முடியும்.

மேலும் வடமாகாண பாதுகாப்புப் பிரிவினரின் கீழ் உள்ள பகுதிகளில் உள்ள கோவில்கள் மற்றும் தேவாலயங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படுவதுடன், அந்த மத ஸ்தலங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கிறிஸ்தவ தேவாலயங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பாக மடு தேவாலயத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ம-7)

## இழக்கப்பட்ட...

பதி இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் பொருளாதார அபிவிருத்தியில் மத நல்லிணக்கம் முக்கிய பங்கு வகிப்பதாகவும் இந்த முயற்சியில் மதத் தலைவர்கள் ஏற்படுத்தக்கூடிய கணிசமான தாக்கத்தை பற்றியும் ஜனாதிபதி எடுத்துரைத்தார். (ம-7)







































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

- கோண்டாவில் கிழக்கில் பலாலி வீதிக்கு அண்மையில் 1 1/2 பரப்புக்காணியில் புதிதாக கட்டப்பட்ட மாடிவீடு விற்பனைக்கு உண்டு. (அமைதியான சூழல்)
- யாழ்ப்பாண நகரம் ஸ்ரான்லி வீதியில் வீட்டுடன் கூடிய மூன்று(03) பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. யாழ் பஸ் நிலையத்துக்கு இரண்டு நிமிடங்களில் செல்லலாம்.

(18524)

**தரகர் தேவையில்லை, வாங்க விரும்புவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.**

**076 742 4301, 075 742 1612**

**Whatsapp - 075 710 9639**




## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(18230)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## மணப் பெண் தேவை

1. இணுவில், இந்து, கௌரவகுலம், 1990, அனுஷம், Quantity surveyor, Australia மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
2. கோண்டாவில், இந்து, கௌரவகுலம், 1990, ரேவதி, Phd Engineering Australia மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
3. கரவெட்டி, இந்து, கௌரவகுலம், 1990, மகம், MSC Engineering Finland மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4. கந்தர்மடம், இந்து, கௌரவகுலம், 1989, உத்தராடம், MSC, Canada மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
5. உடுப்பிட்டி, இந்து, கௌரவகுலம், 1990, உத்தரட்டாதி, Phd, Civil Engineering canada மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
6. உடுப்பிட்டி, இந்து கௌரவகுலம், 1990, அவிட்டம், BSC Engineering Newzland மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
7. பருத்தித்துறை, இந்து கௌரவகுலம், 1990,மகம், Degree holder canada மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
8. சுதுமலை இந்து கௌரவகுலம், 1975 மிருகசீரிடம், BA Graduate, Australia மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
9. இளவாலை, இந்து, கௌரவகுலம், 1995, அனுஷம், Diploma, Divorce Canada மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

(18536)

**தொ.இல. : 077 539 3728**

**Whatsapp : 077 803 8193**

## சமையலாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு தகைமையும் விருப்பமும் உடைய சமையலாளர்கள் தேவை.

(18540)

- பிரியாணி சமையலாளர்
- மதிய உணவு (சோறு கறி - அசைவம்)
- பரோட்டா மாஸ்டர்

**077 214 1214**

## SB TRAVELS AND TOURS PVT LTD.

No.198, Kasthuriyar Road, Jaffna.

விசாக்கள் | ரிக்கெட்டுக்கள்

Malaysia, Dubai, Thailand, China, Vietnam, India E-Visa

நாடுகளுக்கான விசாக்களும் மற்றும் சகல நாடுகளுக்குமான விமான ரிக்கெட்டுக்களை மிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Hotline : 075 555 9932
Tel : 021 222 8555
Jaffna : 076 691 1082, 83
Colombu : 077 108 3482, 83
Email : sbtravelsjaffna@gmail.com

(C-8092)

## வேலையாட்கள் தேவை

அச்சுவேலியில் இயங்கும் KDM கலர் லாப்பிற்கு

- வரவேற்பாளர்(பெண்கள்)
- அல்பம் டிசைனர்
- வீடியோ எடிற்றர்
- பனர் மெசின் இயக்குநர்
- லேசர் மெசின் ஒப்பறேற்றர்
- அல்பம் வைண்டர்

(அல்பம் டிசைனர், வீடியோ எடிற்றர், பனர் மெசின் இயக்குநர்: ஆண்/பெண் இருபாலாரும்)

(18502)

வேலையாட்கள் தேவை. தொடர்புகளுக்கு

**KDM கலர் லாப்**

சந்நிதி வீதி, அச்சுவேலி.

**077 634 1239, 077 669 9451**

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 272 /= | Max 3Kg |
| 1 Kg றவை | - | 288 /= | |
| 1 Kg கோதுமை மா | - | 183 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 186 /= | |
| 1 Kg அரிசி மா | - | 198 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - | 292 /= | Max 2Kg |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - | 423 /= | |
| 1 Kg தீட்டல் பச்சை அரிசி | - | 165 /= | |
| 1 Kg சம்பா அரிசி | - | 230 /= | Max 3Kg |
| 400g sustagen சஸ்ரயன் | - | 3410 /= | ~~3900/=~~ |
| 180ml Chik சம்போ | - | 370 /= | ~~430/=~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - | 270 /= | ~~330/=~~ |
| 500ml Vim Liquid | - | 380 /= | ~~425/=~~ |
| 70g Baby Soap | - | 112 /= | ~~145/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - | 50 /= | ~~80/=~~ |
| 1 Kg Sunlight பவுடர் | - | 345 /= | Max 2 Packet |
| 1 Kg வெள்ளை நாடு | - | 212 /= | |

1028/=




~~1080/-~~

(18538)

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## வீடு விற்பனைக்கு

அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகாமையில் 2 3/4 பரப்பளவைக் கொண்ட மூன்று அறைகள், முழுவதும் மார்பிள் பதிக்கப்பட்ட அழகிய வீடு விற்பனைக்கு உண்டு.

(18432)

**077 664 8287**

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி வடக்கு மீசாலையில் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. மின்சாரம், கிணறு, Water Tank போன்ற வசதிகளும் பல வாகனங்கள் நிறுத்தக் கூடிய இடவசதிகளும் உண்டு.

(18536)

**077 539 3728**

## காணி விற்பனைக்கு

கோப்பாய் மார்க்கம்புரை ஒழுங்கையில் பிரதான வீதியில் இருந்து 10 m தூரத்தில் நல்ல குடியிருப்பு சூழலில் அமைந்த 2 பரப்பு 4 குழி விஸ்தீரணமான காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

(18519)

**077 6911 888**

## A/L - PHYSICS

**தனிப்பட்ட, குழு வகுப்புகளிற்கு**

**Ranjit Sir** (B.Sc, P.G.D.E, S.L.P.S)

Y.M.C.A THAMPASIDDY
2 nd cross st, jaffna.

(18450)

**077 600 4896**

## அலுவலக தேவை/ வேலை வாய்ப்பு

இல. 198, கஸ்தூரியார் வீதியிலுள்ள SB TRAVELS AND TOURS (PVT) LTD. இல் அலுவலக வேலைக்கு AIR TICKETIG அனுபவமுள்ளவர்கள் ( SABRE SYSTEM ) தேவை.

(C-8092)

**077 108 3481 | 021 222 8555**
sbtravels99@yahoo.com

## விற்பனைக்கு

- அலுவலகத்தில் பாவித்த உபகரணங்கள்
- Photo Copy இயந்திரம்
- கூரைத் தகரங்கள்
- மரக்கப்புகள் மற்றும்
- அலுமினிய Fitting என்பன உடன் விற்பனைக்கு உண்டு.

(18522)

**070 316 4214**

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் வியாபார கடைக்கு ஆண்(45 கீழ்) வேலையாள் தேவை. சம்பளம் 35,000/= Basic முன்னனுபவம் தேவையில்லை.

(18404)

**078 911 3766**

## காணி குத்தகைக்கு

சாவகச்சேரி அல்லாரையில் 1 ஏக்கர் தென்னங்காணி உடன் குத்தகைக்கு காய்க்கும் 90 தென்னை, 25 TJC மா, 2 அறைகளுடன் பண்ணை வீடு, 10 மாடுகள் வளர்க்க கூடிய பண்ணை வளாகம், பைப் வசதியுடன் கிணறு தொழிலாளர் மலசலகூடம் உள்ளன.

(18537)

**077 768 7821**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org